1495

1495

# ஜகன்மோகினி



வை.மு.கோதைநாயகி அம்மாள்.

மலர் 11 | 1934 ௵ ஜூன் ௴ | இத

உண்மையான தேசபக்தி மிகுந்த ஒவ்வொரு இந்திய

காலையும், மாலையும் கடவுளை வேண்டுவது எது ?

தம் தேசத்தின் நலமும், தேசமக்களின் நன்மையும்,

சுபீக்ஷமான வாழ்க்கையுந்தான் வேண்டுவர்.

அத்தகைய விஷயங்கள் மலிந்து, மனத்தை யுருக்குவதும்,

மகாத்மாஜீக்கு மிகவும் பிரியமானதுமான

"எத்தனை ஜன்மங்கள் வந்து பிறந்தாலும்

இந்திய மண்ணிடை வேண்டுவனே!"

என்கிற அருமையான பாடலை ஸ்ரீமதி. வை. மு. கோதை நாயகி அம்மாள் தமது இனிய சாரீரத்தில் ராகமாலிகையாக வெகு அழகாய்ப் பாடியிருக்கிறதைக் கேட்டானந்தியுங்கள்.

G E 289 விலை ரு. 2—12—0.

JC
2211, A122 5M
N34·11·7.
182967

..கன்மோகினி" ஆபீஸ்
..தோடித்தெரு திருவல்லிக்..
சென்னை.

ம்பியாவின் முதல் டிராமா ஸெட்

# "ஸீதா கல்யாணம்"

(தமிழில்)

வெகு சீக்கிரத்தில் வெளிவரும்



விவரங்களுக்கு எதிர்பாருங்கள்

கொலம்பியா ஹவுஸ்

சென்னை.




**Buy the above machine from : -**

**MOHAMAD EBRAHIM & Co., 26-27 Rattan Bazzar, MADRAS.**

**HUTCHINS & Co. : : Broadway MADRAS.**

# இது தெரியாதா?

பத்மஜா:—சரோஜா! குழந்தைகள் ஏன் அழுகிறார்கள்? அடித்தாயா!

சரோஜா:—ஆமாம்! எதிர் வீட்டில் கல்யாணம். மேளம் அடிக்கும் வீட்டிலேயே சதா உட்கார்ந்திருக்க வேண்டுமாம். அயல் கல்யாண வீட்டில் பைத்தியம்போல உட்காரவேண்டாமென்று அடித்தேன். அதற்கு அழுகிறார்கள்.

பத்மஜா:—அடி அசடே! கல்யாணமென்றால், வேடிக்கை என்றால் குழந்தைகள் ஆசைப்படுவது சகஜந்தானே! அதற்காக அடிப்பதா! இதோ பாரு; கேட்டாக்கு. கொலம்பியா காமிக் பார்ட்டியினர் கொடுத்துள்ள கௌரீ கல்யாணமே வைபோகமே! (G. E. 269 ரூ. 2/12) என்ற வெகு விநோதமான கல்யாண ரிகார்டை வாங்கிக் கொடுத்து விடு. குழந்தைகள் அதைப் போட்டுக் கேட்டு எப்போதும் கல்யாண வீட்டிலிருப்பதாகவே ஆநந்திக்கட்டும். அதோடு அதே பார்டியினர் கொடுத்த பொங்கலோ! பொங்கல்; போகியோ! போகி! (G. E. 234 ரூ. 2/12) என்ற ரிகார்டையும் வாங்கிக் கொடுத்து விடு. குழந்தைகள் கும்மி யடித்துக்கொண்டும், கல்யாணம் பாடிக் கொண்டும் சந்தோஷமாயிருப்பார்கள்.

குழந்தைகள்:—அம்மா! அம்மா! அதை உடனே வாங்கிக் குடும்மா.

சரோ:—ஆகா! இன்றே சென்று வாங்கி வருகிறேன்.

ஆர்ஸ் கொலம்பியா ஹவுஸ்., சென்னை.

எல்லா "கொலம்பியா" ஏஜண்டுகளிடமும் கிடைக்கும்.

18296)

## 13-வது அதிகாரம்

### தீமை வரும் பின்னே, மனத் திகில்வரும் முன்னே

“மணி! நீ என்ன மூடமா! உன்னை ஸரஸ்வதியின் அருளுக்குப் பாத்திரமாக்க வேண்டியன்றோ நான் பாடுபட்டேன். நீ விஷங்களை நன்கு அறிந்திருந்தும் எனிப்படி வருத்தப்படுகிறாய்? உம். இதற்குத்தான் இவைகளை உங்களுக்குக் காட்டாது இருந்தேன். அதைக் கேட்காமல் பிடிவாதம் செய்து பார்த்துவிட்டீர்கள். இனி என்ன செய்வது? எனக்குத் தேறுதல் கூறுவதாக ஒருவரையுங் காணவில்லையே: இதெல்லாம் நான் செய்த பாபம். வீணாக வருத்தமுற்றுப் பயனில்லை. இவ் விஷயங்களை நமது குருநாதரிடம் கேட்பதற்குச் சென்றிருந்தேன். அவர் வெளியூருக்குச் சென்றிருப்பதாயும் இப்போதே வந்துவிடுவார் என்றும் கூறினார்கள். இதற்காகக் காத்திருந்தேன். சற்று முன்னர் ஓர் ஆள் வந்து அவர் வருவதற்கு இன்னும் இரண்டு நாட்களாகும் என்று தகவல் கொடுத்தான்; பிறகு வந்துவிட்டேன். இப்போது என்ன செய்வது என்று எனக்குப் புரியவேயில்லை. என்னை வருத்தாது நீங்களெல்லாம் சற்று விலகிச் செல்லுங்கள். காலையில் பார்க்கலாம்'' என்றார். அதோடு இரு பெண்மணிகளும் தம் தம் விடுதிக்குச் சென்றார்கள்.

இன்பமணிக்குப் பலவிதமான வேதனைகள் வந்து சூழ்ந்து கொண்டன. இரவு முற்றும் வேதனையிலேயே வதைந்து பொழுதை யோட்டி ஆதித்தன் வரவை அதி வேகமாக எதிர் நோக்கினாள். பொழுதும் புலர்ந்தது. புள்ளினங்களும் எழுந்து தம் தம் ஆரவா

முக்கியம், முக்கியம் என்று எதை நினைக்கிறோமோ அது சிற்சில சமயத்தில் சர்வசாதாரணமாய்—உபயோகமற்றதாகி—விடுகிறது. எதை அல்பமாக நினைத்து அசட்டையாக விருக்கிறோமோ, அதுவே முக்கியமாக சில சமயம் நேர்ந்து விடுகிறது.

ரத்துடன் எதேச்சாதிகாரமாகத் திரிய வாரம்பித்தன. மணி வழக்கம்போல தன் காலைக் கடன்களை முடித்துக்கொண்டு பறவை களுக்குத் தானியங் கொடுத்தாள்.

ஒன்றுக்கொன்று வெகு உல்லாசமாகவும் வேற்றுமையற்ற தன்மையுடனும் கூடிக் குலாவிக் களித்து தானியங்களைப் பொறுக் கித் தின்னும் ஆநந்தகரமான காக்ஷி மணியின் மனத்தையுருக்கியது. இக் கூட்டங்களிலுள்ள ஒற்றுமை பேரறிவும், ஆரறிவும் பெற்ற மனிதர்களின் கூட்டத்திலில்லையே! உயர்வு தாழ்வு என்பதற்று இப் பக்ஷி யினங்களைப்போல மனித வர்க்கத்தினரும் ஏன் வாழலாகாது? மனிதன் உலகத்தில் ஜெனிப்பதற்கு முன்பே பொறாமை, கபடம், கெடுமதி முதலிய துணைகளெல்லாம் கூடவே பிறந்துவிடுகின்றன. அவைகளே முதன்மையான ஸ்தானத்திலிருப்பதால்பிறருக்குத் தீங் கிழைக்கவும், கெடுக்கவும் அவர்களைக் கண்டு அசூயை கொள்ளவும் மிருகத்தனமாக நடந்துகொள்ளவும் தலைப்பட்டு விடுகிறார்கள். இத னால் எதேனும் லாபமுண்டா? தானுங் கெட்டுப் பிறரையுங் கெடுத் துப் பாப மூட்டையைச் சுமக்கிறார்கள்.

"சீச்சி! மாய உலகம்! அக்ரம உலகம்! என் தந்தையின் மீதா அபாண்டப்பழி வருவது. என் தந்தையா லஞ்சம் வாங்குவார். இது அனியாயத்திலும் அனியாயம். என் தந்தையின் மீது பொறாமை கொண்ட எந்த சண்டாளனோ இவ்வித கலகம் செய்திருக்கிறான். கடவுளை நம்பிய என் பிதாவை அக்கடவுள் கைவிடுவாரா? காப்பாற் றியே தீருவார்.'' என்று தனக்குள் எண்ணியவாறு, பக்ஷி யினங்க ளுக்கு தானியங்களைக் கொடுத்துவிட்டு பூஜைக்கு புஷ்பம் பறிக்கச் சென்றாள். புஷ்பங்களின் அழகும் பரிமளமும் ஒன்று கூடி பரவச முறச்செய்கின்றதெனினும் அன்றுள்ள புதிய கலக்கமே தலைசிறந்து நிற்கிறபடியால் உத்ஸாகமே மங்கிவிட்டது. ஏதோ பதுமையைப் போல புஷ்பத்தைப் பறித்துக்கொண்டு சென்று சிலவற்றை சரங்க

---

உலகானுபவம் பெறுவதற்கு வழிகள் பற்பல உள. அவற்றில் ஒன்று பின் வருவது. சில தினங்கள் சினேகம் செய்துப் பிறகு விட்டுவிடும். ஒருவரின் சினேகத்தைப் பிடித்தால் அவர் சினேகமாயிருக்கும் சில தினங்களில் தான் இதற்குமுன் எத்தனை பெயருடன் சினேகம் செய்து பிரிந்த கதைகளையும்

ளாகவும், மாலையாகவும் கட்டி வைத்துவிட்டுத் துளசி மாடத்திற்குப் பிராதக் காலப் பூஜையைச் செய்து முடித்துப் பின் தன் தந்தையின் ஆபத்தைக் களைந்து காக்கவேண்டுமென்று வேண்டிக்கொண்டு பிறகு தன் தந்தையிடம் சென்றாள்.

சர்வோத்தமர் அன்று வழக்கத்திற்கு விரோதமாக இன்னும் தம் படுக்கையறையை விட்டு எழுந்து வராததைக் கண்ட மணி திடுக்கிட்டாள். "மணி ஆறரை ஆகிறதே! இத்தனை நேரம் அப்பா ஒருபோதும் தூங்கியது கிடையாதே! ஏன் இன்று எழுந்திருக்க வில்லையோ தெரியவில்லையே." என்று உள்ளே சென்று கதவை ஆட்டிப் பார்த்தாள். திறக்கவில்லை. தன் தாயிடம் சென்று "அம்மா! அப்பா! ஏன் இன்னும் எழுந்திருக்கவில்லை." என்று கேட்டாள்.

ரங்க :—அம்மா! நானும் காலைமுதல் அலைந்துகொண்டுதானிருக்கிறேன். கதவை நாம் இடித்தால் கோபித்துக் கொள்வாரே என்ற பயத்தினால் பேசாமலிருக்கிறேன். இன்னும் சற்று நேரம் பார்த்துவிட்டுப் போய் கதவை இடிக்கலாமென்று நினைக்கிறேன். அதி காலையிலேயே யாரோ ஒருவர் வீதியில் வந்து உன் பிதாவைக் காணக் காத்திருக்கிறார். அவர் உன்னுடைய பிதாவாம். வேலையாட்களிடமெல்லாம் சொல்லிச் சொல்லி யனுப்புகிறார். நேற்று படித்த கடிதத்தின் ஆசாமிபோலிருக்கிறது. இன்னும் எஜமான் எழுந்திருக்கவில்லை என்று வேலைக்காரர்கள் சொன்னார்களாம். அந்த மனிதனைப் பார்த்தால் முனீச்வரனைப் போல உட்கார்ந்திருக்கிறான். வெகு பயங்கர ரூபமாக விருக்கிறது.

மணி :—(இடைமறுத்து) வீதியிலா உட்கார்ந்திருக்கிறார்? ஐயோ! எனக்கு ஏதோ சங்கடமுண்டாகிறதே! என் பிதாவென்று கூறுவது நிஜமாக விருக்குமா! இது என் மனத்திற்கென்னவோ வேற்றுமையாக விருக்கின்றதே!

---

அவர்களைப் பற்றிய விஷயங்களையும் கூறுவார். அவற்றைக் கேட்டுக்கொண்டு அம்மட்டுடன் நீ விலகி விடு. விஷயத்தை யறியவேண்டிய தல்லவோ முக்கியம்.

ரங்க :—கண்ணே! நமக்கு இப்போது பெரிய சோதனை காலமென்று தோன்றுகிறது. எது வந்தாலும் அனுபவித்துத் தீரவேண்டுமல்லவா!...ஆ! அதோ பார்! ஏதோ ப்ரம்மாண்டமான கூச்சல் கேட்கிறது. அந்த மனிதன் ஏதோ சண்டையிடுவதுபோலத் தோன்றுகிறது—என்று இவர்கள் பேசி முடிப்பதற்குள் ஒரு வேலைக்காரன் வெகு வேகமாக உள்ளே வந்து "அம்மா! அங்கு வந்துள்ள மனிதன் ஏதோ தாறுமாறாக உளறுகிறான். சண்டைக்கு மார் தட்டிக் கத்துகிறான். இன்பமணியம்மாளின் தந்தையாம் அவன். அவனுடைய மகளை ஐயாவும், நீங்களும் மோசமாகத் திருடிக்கொண்டு வந்து கெடுக்கிறீர்களாம். இப்போது இன்னும் ஐயா எழுந்திருக்கவில்லை என்று நாம் பொய்யாகக் கூறுகிறோமாம். 'உடனே என் பெண்ணை என்னிடம் விடாவிட்டால் நான் என்ன பண்ணுகிறேன் பாரு.' என்று கர்ஜிக்கிறான் நாங்கள் என்ன சொல்லியுங் கேட்கவில்லை. என்ன செய்வது?" என்றான்.

இதைக் கேட்ட இன்பமணி மிகவும் கலக்கத்தை யடைந்து "அம்மா! அப்பா திட்டினாலும் சரி. நான் சென்று அப்பாவை எழுப்புகிறேன். அம்மனிதர் என்னைப் பெற்ற பிதாவாகவே இருப்பினும் எனக்கவர் புதிதல்லவா! நான் திடீரென்று எப்படி அவர் முன்பு செல்லுவது. நான் அப்பாவை எழுப்புகிறேன்" என்று துணிபுடன் கூறிக்கொண்டே வெளியில் வந்தாள்.

அதற்குள் அம்மனிதன் வெறி பிடித்தவன்போல வீட்டுக்குள் ஓடி வந்து "எங்கே என் செங்கீ! என் செங்காத்தி எங்கே!" என்று கத்திக்கொண்டு வந்தான். இதைக் கண்ட எல்லோரும் ப்ரமை பிடித்துவிட்டார்கள். அங்குள்ள வேலைக்காரர்கள் எத்தனை சமாதானம் செய்தும் கேட்கவில்லை. இந்த விபரீதத்தைக் கண்டு பயந்துவிட்ட மணி எதிரிலேயே நின்று "ஐயா! நான்தான் செங்கீ

---

பொதுக்கூட்டங்களில் சிலர் கடவுள் வணக்கம் பாடுகையில் கொஞ்சங்கூட பக்தியை யுண்டாக்கத் தக்க விதமில்லாமல் ஏனோ தானோ வென்று பாடுகிறார்கள். இம்மாதிரி ஒப்புக்குப் பாடுவதை விடப் பாடாமலிருப்பது மேலானதல்லவா?

என்பவள். ஏன் இப்படி கத்திக்கொண்டு ஓடுகிறீர்? இதோ என் பிதா வருவார். உட்காரும்; கூச்சலிடவேண்டாம்'' என்றாள்.

இதைக் கேட்ட உடனே அம்மனிதன் "ஆ! என் கண்ணே! என் செங்காத்தா! எம் மவளே! என் ராசாத்தீ! வாடீ!'' என்று அருகில் வந்தான். மணி அப்படியே விலகிக்கொண்டு "ஐயா! வீணாகக் கத்தவேண்டாம். இங்கு உட்காரும். என் பிதா வரட்டும். பிறகு பேசிக்கொள்ளலாம்'' என்றாள்.

வந்த :—ஆகா! நானல்லவோ உன்னைப் பெத்த தந்தை. என்னை இதற்குள் மறந்துவிட்டாயா! நான் தெரியவில்லையா! என்னைப் பாரு. உன் தந்தை நானிருக்க யாரை நீ தந்தை என்று கூப்பிடுகிறாய். வா! என்னோடு வீட்டிற்கு. இத்தனை நாள்தான் பாவியாய், படுபாவியாய் போய்விட்டேன். இனிமேல் உன்னை விடமாட்டேன். என்னோடு வந்துவிடு. என் கண்ணே! இனிமெ ஒன்னெ விடமாட்டேன். என் செல்வ மகளே!

மணி :—ஐயா! இந்த பேச்செல்லாம் இருக்கட்டும். நீர் என்னைப் பெற்ற பிதாவாகவே இருக்கலாம். என்னுடைய அதி பால்ய வயதில் விட்டு விட்டு குடும்பத்தையே தவிக்கச் செய்து வெளியேறி விட்ட பிறகு உம்மை என் தாயார் உயிரோடிருந்தாலும் அடையாளங் கண்டுகொள்ள முடியாது. அப்படியிருக்க அப்போதும் முகம் தெரியாத குழந்தையாக இருந்தேன். இப்போதும் உம்மை நான் தெரிந்துகொள்ள முடியாது. என்னைப் பெறுவிடினும் பெற்ற தாயினும்—தந்தையினும்—பதின்மடங்கு அதிகரித்த வாஞ்சையோடு, ப்ரீதியோடு வளர்த்து வரும் உத்தமரே எனது பிதா. ஆகையினால் தாங்கள் அவசரப்படவேண்டாம். என் பிதா வரட்டும்'' என்று கூறிக் கொண்டே சடக்கென்று உத்தமரின் படுக்கை யறையண்டை சென்றாள்.

---

சிலர் தாங்கள் பேசவேண்டிய விஷயத்தை முன்னதாகவே எழுதி அச்சு போட்டுக் கொண்டுவந்து படிக்கிறார்கள். அதை கூட்டத்தினருக்கு முதலிலேயே கொடுத்து விடின் அவர்கள் விஷயத்தைத் தெரிந்து கொள்ள சௌகரிய மாயிருக்கும். அதில்லாமல் தாங்கள் மகவும் தாழ்ந்த குரலில் படித்தால் நன்றாகக் கேட்காதவர்கள் வீண் கலபை செய்ய இடமுண்டாகின்றது.

வெகு ஆவலுடன் கதவைத் தட்டினாள். கதவு உடனே திறந்துகொண்டது. உத்தமர் தமது அறையிலேயே யாருடனோ பேசுங் குரல் கேட்டதும் மணி மெல்ல அவரெதிரில் போகாமல் ஒரு புறமாகவே நின்றுவிட்டாள். யாருடன் பேசுகிறார். என்ன பேசுகிறார் என்பது புரியவில்லை யாகையினால் மெல்ல தன் தாயிடமே வந்து "அம்மா! அப்பா யாருடனோ பேசிக்கொண்டிருக்கிறார். உடம்பு ஒன்றுமில்லை'' என்றாள். இதைக் கேட்டு சந்தோஷமடைந்த ரங்கமணி தன் வேலையைக் கவனிக்கச் சென்றுவிட்டாள்.

வழக்கம்போல உத்தமர் தன் காரியங்களை முடித்துக்கொண்டு பூஜை முதலியன செய்து, பின் குழந்தைகளுக்குப் பசும் பால் கொடுத்து, பசுமாடுகளுக்கு அகத்திக் கீரையைக் கொடுத்துவிட்டு வந்தார். அன்று அதிகமாக யாருடனும் பேசவில்லை. எனினும் இன்பமணி தன் பிதாவென்று வந்திருக்கும் மனிதனைக் காட்டி "அப்பா! இவர் என் பிதாவாம்; ஏதோ சொல்கிறார்: கேளுங்கள்.'' என்றாள்.

உத்த:—ஐயா! தாங்கள் தானே கடிதம் எழுதியவர்கள். தாங்கள் என்ன சொல்ல வந்தீர்கள். எனக்கு வேலை அதிகமாக விருப்பதால் நான் போகவேண்டும். சீக்கிரம் சொல்லும்.

வந்த:—ஆம் நான்தான் கடிதமெழுதியவன். இந்த குழந்தை என்னுடைய தல்லவா! அந்த ஆசையினால் பார்க்க வந்தேன். என்னுடைய வாழ் நாளை முற்றும் வீண் நாளாக ஆக்கிவிட்டேன். இப்போதுதான் புத்தி வரப்பெற்றேன். சென்றதை எண்ணி வருந்திப் பயனில்லை. என் விதி என்னை இதுவரையில் உதவாக் கட்டையாக ஆக்கிவிட்டது. இனி நான் என்னாயுசு காலம் வரையில் என் கண் மணியுடன் கூடவே இருந்து என் காலத்தைக் கடத்த மிகுந்த ஆவலுள்ளவனாக விருக்கிறேன். இதுவரையில் என் குழந்தையைத்

---

தாய்ப் பாஷையை விருத்திக்குக் கொண்டு வருவதற்கு அதனிடத்தில் அன்பு இருக்க வேண்டும். அதில்லாவிடில் நமது கடமை என்கிற உணர்ச்சி யாவது இருக்கவேண்டும் இரண்டு மில்லாது கூலிக்கு மாரடிக்கிறதாக இருந்தால் எப்படி விருத்தியடையும்?

தாங்கள் காப்பாற்றியதற்கு மிக்க வந்தனம். இனி என்னுடன் அனுப்பிவிட வேண்டுமாய்க் கோருகிறேன்.

உத்த:—ஐயா! திடீரென்று நீர் குழந்தையின் தந்தை என்று வந்தால் உம்மை நம்புவது எப்படி? இதற்கு முக்யமான ஆதாரம் வேண்டாமா?

வந்த:—ஆகா! இக் கேள்வியைத் தாங்கள் கேட்பது மிகவும் வாஸ்தவம். நான் உமக்கு எப்படி விளக்குவேன். இவர்களுடைய பூர்வ கதையைக் கூறுகிறேன். என் மாமியார் ஏற்கெனவே உங்களுக்குச் சொல்லி இருப்பார்கள். அங்கப்பன் என் பேரு. என்னுடைய சிறிய பிராயத்தில் எங்க தகப்பனர் என்னைக் கவனிக்காமல் மாடு மேய்க்க விட்டார். எனக்கும் புத்தி இல்லாததினல் திரிந்து கொண்டே இருப்பேன். படிப்பு வாசனையே தெரியாது. எங்க தகப்பனர் எனக்குக் கல்யாணத்தையும் சீக்கிரம் செய்துவிட்டார்.

கொஞ்ச நாளைக்குள் அவர் காலமாகிவிட்டார். சம்சாரம் என் தலைமீதே விழுந்துவிட்டது. இந்த குழந்தையும் எனக்குப் பிறந்துவிட்டது. பிழைக்க வழியின்றி திண்டாடினேன். என் மாமியாரும் மனைவியும் என்னை முகத்தாலடித்துத் திட்டி இழிவு படுத்தினர்கள். மழையும் இல்லாததால் பயிர் வேலையுங் கிடைக்காது தகராராய்ப் போய்விட்டது. பிறகு எனக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. இவர்கள் செய்யும் உபத்திரவமோ பொறுக்க முடியவில்லை. மனம் அளிந்த புண்ணுகிவிட்டது. என்னல் சகிக்க முடியாததால் பிராணனை விட்டுவிட எண்ணினேன். அச்சமயம் ஓர் கங்காணி என்னைச் சந்தித்து ரப்பர் தோட்டம், தேயிலைத் தோட்டம், காப்பித் தோட்டம் முதலியவைகளில் வேலை செய்தால் நிறைய பணம் சம்பாதிக்கலாம் என்று ஏதேதோ ஆசை வார்த்தைகளைக் கூறினன். இந்த பிசாசுகள் தினம் விடிந்தால் படுக்கும் வரையில் பாவி, படுபாவி, பேமானி, வெக்கமில்லாமல் தின்ன வருகிறுயே. தடியன் போல

---

வண்டுகள் எப்படி புஷ்பத்தைக் கொஞ்சங்கூடக் கெடுக்காமல் அதிலுள்ள தேனை மாத்திரம் பருகுகின்றனவோ அம்மாதிரி சிலர் மற்றவர்கள் அறியாதவாறு அவர்களிடமுள்ள கல்வியையோ, செல்வத்தையோ கிரகிக்கின்றனர்.

விருக்கிறாய் வேலை செய்யாமல் சோறு எப்படி வரும். உன் பவிஷுக்கு வடித்த சுடசோறு? ஊறுகாயா? உன் மூஞ்சிக்கு பலகாரமா: பதார்த்தமா! இப்படி மானங் கெட்டுத் தின்று கொழுப்பதை விட நாளுக விருப்பின் நாக்கைப் பிடிங்கிக்கொண்டு பிராணனை விட்டுவிடுவேன்.'' என்றெல்லாம் திட்டு வாங்குவதைவிட இவர்களை விட்டுத் தொலைந்துபோய் விடலாமென்று போய்விட்டேன். என் காலக் கொடுமையினுல் அங்கேயும் வேண்டிய கஷ்டங்களைப் பட்டு இப்போதான் இங்கு வந்தேன். வந்து விசாரித்ததில் என் கொழந்தை மட்டும் இங்கே இருப்பதாகத் தெரிந்து எழுதினேன். இனி என்னை நம்புவீர்களல்லவா?

உத்த :—அப்படியா! உம்முடைய சரித்திரம் இவ்வளவுதானு! சரி! அம்மா! மணீ! சகலத்தையும் கேட்டாயல்லவா! என்ன சொல்லுகிருயோ பதில் உன்னிஷ்டப்படி சொல்லு. நீ குழந்தையல்ல. பெரியவள். படித்த அறிவாளி. பிறருக்குப் புத்தி கூறத்தக்க சாமர்த்தியம் படைத்தவள். உன் மனத்தை யொளிக்காது உன்னபிப்ராயத்தைக் கூறிவிடு.

இன்ப :—அப்பா! தாங்கள் கூறியது வாஸ்தவந்தான். இவர் என்னைப் பெற்ற பிதாவாகவே இருக்கலாம். இருந்தாலும் எனக்குப் பிதா தாங்கள்தான். நான் தங்களை விட்டு அரைவினுடிகூடப் பிரியமாட்டேன். அப்பா! தாங்கள் என்னைக் கைவிடக்கூடாது. இவர் என் பிதாவாக விருப்பினும் இவருடன் செல்லச் சிறிதும் நான் விரும்பவில்லை. என்னைப்பற்றி இவர் எப்படி நினைத்துக்கொண்டாலும் சரி; நான் தங்கள் பாதத்தைவிட்டு விலகவே மாட்டேன்; என்னருமைத் தாயாரை விட்டுப் பிரியவே மாட்டேன். வேண்டுமாயின் இவர் பெற்றவர் என்பதால் தினம் இங்கு வந்து பார்த்துச் செல்லட்டும். இதற்குமட்டும் நான் ஒப்புக்கொள்கிறேன்.

---

சிலர் ஒரு விஷயத்தைப் பேசுகையில் அதற்கு இரண்டு பக்கங்கள் உண்டு என்பதை மறந்து தம் போக்காகப் பேசிக் கொண்டே போகிறுர்கள். எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர் பேசுவதற்குத் தைரியமில்லாதவர் களாக மௌனமாயிருப்பின் மற்றவர் தங்கள் பக்கமே நியாய மென்று தீர்மானித்து விடு

உத்த:—ஐயா! என்ன சொல்லுகிறீர்? குழந்தையின் மனத்தை யறிந்துகொண்டீர், என்ன சொல்லவேண்டுமோ சொல்லும். நான் மத்தியில் உமக்காவது அவளுக்காவது குறுக்கிடுவதாக நினைக்க வேண்டாம்.

அங்கப்பன் :—(கண்ணீர் பெருக) ஐயா! நான் என்ன கூறுவேன்? நான் இந்த ஒரு குழந்தையைப் பெற்றவன். தாங்களோ அனேக அனாதைக் குழந்தைகளின்—ஏழைக் குழந்தைகளின்—பிதாவாக விளங்குகிறீர்கள். அம்மா! மணீ! நான் உன்னைப் பெற்றவனு யிற்றே! என்னை அலக்ஷியம் செய்யலாமா! நான் ஒரு ஒண்டிக்கட்டை யல்லவா! உனக்காகவன்றோ என் ஜீவன் இருக்கிறது. நீயும் புறக்கணித்துவிட்டால் என்னுயிரை நான் த்யாகந்தான் செய்ய வேண்டும். உன்னை வளர்த்த பிதா அவராகவே இருக்கட்டும்; என்னையும் நீ மறக்கலாகுமா!'' என்று கூறிப் புலம்பினான்.

இதைக் கண்ட உத்தமரின் மனம் கலங்கியது. அவர் விசனத்துடன் மணியை நோக்கி "அம்மா! இன்பமணீ! அவர் புலம்புவது எனக்கு மிகவும் பரிதாபமாக விருக்கிறது. எனக்கென்ன தோன்றுகிறதெனின் அவர் உன் பொருட்டு உயிர் வாழுபவராகத் தெரிகிறது. உன்னைப் பிரிந்தால் என்னுயிரும் தத்தளிக்கும். ஆதலால் உன்னைப் பெற்ற பிதாவை நீ புறக்கணிப்பது பெரிய பாபச் செய்கையாகும். அவரோ ஒண்டிக்கட்டை. அவரை ஏன் நீ தனியாக விடவேண்டும். அவரும் உன்னோடு இங்கேயே இருந்து காலத்தைக் கழிக்கட்டும். அவருடைய மனமும் த்ருப்தியாகும்; உன் மனமும், என் மனமும் களிப்படையும். இதற்கு நீங்களிருவரும் என்ன சொல்கிறீர்கள்? என்றார்.

இந்த ஏற்பாடு இருவருடைய மனத்திற்கும் மிகவும் பிடித்தது. அங்கப்பன் உத்தமரின் காலில் விழுந்து வணங்கி "ப்ரபுவே! உத்தம

---

கிறார்கள். யாராவது தைரியமாகப் பேச முன் வந்தால் அவரை அதிகப் பிரசங்கி, கலபைசெய்ய வந்தவரென்று ஒதுக்கிவிடுகிறார்கள். ஆனால் அவருக்குப் பக்கபலமாகப் பலர் இருப்பின் இடங்கொடுக்க நேரிட்டு வாயுள்ள பிள்ளை பிழைக்கும் என்கிற பழமொழி உண்மையாகி விடுகின்றது.

சிரேஷ்டரே! உங்களுடைய குண விசேஷத்தைப்பற்றிச் சில நல்ல வர்கள் உள்ளதை உள்ளபடி கூறினர்கள். பின்னும் சில பாதகர்கள் தங்களைப்பற்றிக் கண்டபடி பேசி என்னையே கலக்க முயன்றார்கள். ஆனல் நான் முன்பின்னறியாதவன். எதை நம்புவது. இப்படியு மிருக்கலாம்; அப்படியுமிருக்கலாம் என்கிற சந்தேகமே உதித்தது. அதனல்தான் கடிதமெழுதினேன். தங்களை நேரில் தரிசித்த பிறகு என் ஜன்மமே சபலமாயிற்று. நானே ஆண்டிப்பரதேசி மாதிரி ஒண்டிக்கட்டை. என்னருமை மகளுடன் என் சொல்ப காலத்தையுந் தள்ளிவிட்டால் போதும். ஒரு வயிறு சாதமும் ஒரு கந்தையுந் தான் எனக்கு வேண்டியது. தர்மதேவதையே! நான் தங்களடிமை. எனக்கு இந்த ஒரு உபகாரம் செய்ததற்கு நான் என்னுயிசு காலம் பூராவும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.'' என்று கூறிக் காலில் விழுந்து வணங்கினன்.

ஐயா! இதெல்லாம் கிடக்கட்டும். மரியாதைகளையும் நன்றி விசுவாசத்தையும் எல்லாம் வல்ல இறைவனுக்குச் செலுத்தும். நீர் இங்கிருப்பதனல் எங்களுக்கு ஒரு கஷ்டமும் இல்லை. தாங்கள் தாராளமாக உங்களுடைய குழந்தையுடன் சந்தோஷமாக இருங்கள். ஒருவித கவலையுங் கொள்ளாது உமது சொந்த வீடு போல பாவித்துக்கொண்டிரும். நான் சென்று வருகிறேன். அம்மா! மணீ! உன் பிதாவை வெகு அக்கரையாக கவனித்துக்கொள்ளு. எந்த வகையிலும் அலக்ஷியம் செய்யாதே; நான்தான் அவராக நினைத்துப் பக்ஷமாக நடந்துகொள்ளு. உன்னைக் கேவலம் சிறிய பிராயத்தில் விட்டுச் சென்றுவிட்டதால் உனக்கு அவரைப்பற்றிய நினைவே மறந்துவிட்டது. இனி யவர் உன்னைப் பிரியமாட்டார்.'' என்று உத்தமர் வெகு அன்பாகக் கூறிவிட்டுச் சென்றார்.

மணிக்கு என்னவோ எவ்வளவு தான் மனத்தில் இவர் மீது

---

சொன்னது சொன்னதுபோலத் தவருமல் செய்வது சிலர்தான். பின்னும்சிலரோ, ''கட்டாயம் முடித்துவிடுகிறேன்'' என்று வீண் ஆசை வார்த்தைகளைக் கூறிவிட்டு அடியோடு திரும்பிப் பாராமலிருந்து விடுகிருர்கள். அவர்கள் வேறொரு சமயத்தில் உண்மையிலேயே நிஜமாகச் செய்ய நேர்ந்தாலும் நம்பக மிருப்பதில்லை. முதல் செய்கை யல்லவோ மனத்தில் படியும்.

அன்பாக விருக்க வேண்டுமென்று பிரயத்தனப்பட்டாலும் அது அவள் மனத்தில் பதியவில்லை. தன் பிதா உத்தமர்தான் என்கிற திடமான எண்ணமும், நம்பிக்கையும், விச்வாசமுமே வேரூன்றி விட்டதால் இவளால் மாற்ற முடியவில்லை. உத்தமரின் உபதேசத்தைத் தட்டாமல் இம் மனிதனிடத்தும் நன்றாக நடக்கத் தொடங்கினாள். அன்று முதலே அங்கப்பனுக்கு ஏதோ பெரிய புதையல் கிடைத்தது போலான சந்தோஷம் உண்டாகிவிட்டது.

இன்பமணிக்குத் தன் பிதாவின் கவலைகள் தீர்ந்து சந்தோஷமாக விருந்தால் போதும் என்கிற எண்ணமும், பிரார்த்தனையுந் தவிர வேறு தோன்றவே இல்லை. அன்று மாலை வழக்கம்போல உத்தமரின் வரவை எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள். மாலை வேளை. சிலு சிலுப்பான காற்று வீசுகிறது. பக்ஷி இனங்களெல்லாம் தம் தம் கூட்டத்துடன் கூட்டில் வந்து அடைகிற ஆநந்தத்தைப் பார்த்துக் கொண்டே மணி உட்கார்ந்திருக்கிறாள். நேற்று கூறியபடி வாஸுதேவன் எப்போது வருவான் என்று வழி பார்த்துக்கொண்டே உட்கார்ந்திருக்கிறாள்.

சற்று நேரத்திற் கெல்லாம் வெகு வணக்கத்துடனும் பயத்துடனும் அங்கு வாஸுதேவன் மெல்ல வந்தான். வழக்கமாய் மணி உட்காருமிடத்தில் அவள் மட்டும் மிக்க விசனத்துடன் உட்கார்ந்திருப்பதைக் கண்டு அருகில் சென்று "அம்மணீ! ஏன் தங்கள் முகம் வாட்டமடைந்திருக்கிறது." என்று கேட்டான். மணி மரியாதையுடன் வாஸுவை உட்காரச் சொல்லி தான் ஒரு புறமாக நின்று "நான் நேற்றே ஏதோ கவலை என்று கூறவில்லையா? அதுதான்; வேறு புதிதொன்றுமில்லை. அதுவே என் மனத்தை வாட்டுகிறது. இரவு முற்றும் நித்திரையே இல்லை. நேற்று என் பிதா வந்தபிறகே அவருடைய வருத்தத்தின் காரணத்தை யறிந்தோம். அவைகளைக் கேட்க மிகவும் பயங்கரமாக விருக்கிறது. என்ன செய்வதென்றே

---

முக்கியமான இரண்டு வேலைகளை முடிக்க வேண்டும். ஒன்று முடியாமல் மற்றொன்று முடிவதில்லை. இதற்காக அதையும் அதற்காக இதையும் நிறுத்தி வைத்துக் கடைசியில் இரண்டும் ஒரே காலத்தில் வந்து முட்டிக்கொண்டு வதைக்கின்றன. சில வேளையின் செயல் போலும் இது.

தோன்றவில்லை. மனம் தத்தளிக்கின்றது. (தன் தந்தை காட்டிய கடிதங்களின் விஷயங்களையும், தன்னைப் பெற்ற தந்தை வந்துள்ளதையுங் கூறினாள்) தங்களுடைய வருகையையே எதிர்பார்த்திருந்தேன். என் பிதாவோ பரம வேதாந்தி என்பது தங்களுக்குத் தெரியும். அவர் எதையும் லக்ஷ்யம் செய்யமாட்டார். கடவுள், கடவுள் என்று கூறிக்கொண்டிருக்கிறார். எனினும் ஏதோ வருத்தம் மாத்திரம் முகத்தில் தெரிகிறது. எனக்கும் என் தாயாருக்கும் உள்ள வேதனையைக் கூறவே திறமன்று.

ஏதோ வீட்டில் பயங்கர சம்பவம் நடக்கப் போவதாக ஒரு கடிதத்தில் எழுதி இருப்பதை நினைக்கத் தலை சுழலுகின்றது. மூளையே குழம்புகின்றது. எந்த நேரத்தில் என்ன பயங்கரம் நடந்துவிடுமோ தெரியவில்லை. அதிலும் இரு பெண்மணிகளுக்கும் விபத்து என்றும் எழுதி இருக்கிறது. ஐயா! இச்சமயம் தங்களைத் தான் நான் நம்பி இருக்கிறேன். எங்களை சற்று கவனித்துக்கொள்ள வேண்டும். என் தந்தைக்கு எவ்விதமான குறைவுமின்றி பார்த்துக் கொள்ளவேண்டியது என் கடமை......நான் கடமை என்று கூறுவதைத் தாங்களும் கடமை என நினைப்பீர்களென்று இந்த ஆகாய வாணி, பூமிதேவி சாக்ஷியாக நினைக்கிறேன். நான் ஏதோ அவசரப் பட்டுப் பேசிவிட்டதாக நினைக்கக்கூடாது. என் மனத்தில் ஏதோ என்னை யறியாது ஒரு வேதனை செய்கிறது. கபீர், கபீர் என்று சங்கடம் உண்டாகிறது. என்னை ஏதோ ஓர் ஆபத்து வெகு துரிதமாகத் துரத்துவதுபோலான பயங்கரத் தோற்றம் உண்டாகின்றது. அதனால்தான் நான் முன் பின் யோசியாமலும், பெண்பாலாக இருந்தும் லஜ்ஜையை விட்டும் கூறுகிறேன். இதுவரையிலிருந்தது போன்றிராமல் இனிமேல் இங்கு அடிக்கடி வந்துகொண்டிருக்கவேண்டும்.'' என்று கூறி முடிப்பதற்குள்,

---

சில ஆடம்பரக்கார—ஜம்பக்கார—பேர்வழிகள் கிராமபோனில் பாட்டு கொடுக்க வருகையில்—காற்றடைத்து வேகக்கூடிய இடத்தில் பாட வரும் போது—தூக்க முடியாத நகைகளுடனும், சரிகைப் புடவைகளுடனும், மாவு முதலியன பூசிக்கொண்டும் ஆர்பாட்டமாக வருகிறார்கள். அவ் விடத்திற்குள்

182967.



வாஸு வெகு ஆச்சரியத்துடன் "ஹா! தாங்கள் உத்தமரின் சொந்த புதல்வி இல்லையா! இதென்ன வேடிக்கை! தாங்கள் உத்தமரின் சொந்த புதல்வி என்றல்லவோ இது பரியந்தம் எண்ணி இருந்தேன். உங்களுக்கு அவர் பந்துவா!" என்று வியப்புடன்கேட்டான்.

மணி:—ஐயா! என் சரிதையைக் கதைபோலக் கூறலாம். (சகலத்தையுங் கூறி) இத்தகைய மகானுபாவன் தற்போது எனது தந்தை, குரு, தெய்வம் எல்லாமாக விளங்குகின்றார். நான் இவ் வீட்டில் வேலை செய்வதற்குக்கூட யோக்யதை யற்றவள். பரம தரித்திரமான குடும்பத்தைச் சார்ந்தவள். என் முன்னோர்கள் செய்த மாதவமோ அன்றி யான்தான் செய்த புண்ணியமோ தெரியவில்லை. இந்த த்யாக மூர்த்தியின் புதல்வியாக இன்று வரையில் விளங்குகின்றேன். என் உண்மை நிலையை நீங்களறிந்தபின் என்னை வெறுப்பீர்கள் என்பதை நான் அறிவேன். என்றைக்கிருப்பினும் என்னுடைய நிலைமையைத் தாங்களறியவேண்டியது கடமையல்லவா! என்னை என் பிதா இத்தனை சிறப்பாக வைத்திருப்பதுதான் அநேகருக்குப் பொறாமை பிறந்துவிட்டது. அதனால் யாருக்கு என்ன தீங்கு செய்யலாம் என்று பார்க்கிறார்கள். இவைகளை எல்லாம் நினைத்தால் எனக்கு மிகவும் பயமாக விருக்கிறது. என் செய்வது?

182967.

வாஸு:—அடாடா! அப்படியா நீங்கள் நினைத்துவிட்டீர்கள்? தங்களுடைய உண்மையான நிலைமையை அறிந்த பிறகு என் மனம் கட்டுக்கு மீறுகின்றது. என்னைவிட ஓர் பரம ஏழை. அன்றூடம் உழைத்துக் கஞ்சி குடிக்கும் கூலிக்காரன். என்னுடைய இன்னிலைமையில் ஓர் மகாராஜனுக்கு ஒப்பானவரின் புதல்வியின் மீது இத்தகைய எண்ணத்தை ஈசன் காட்டிவிட்டாரே என்று நான் இரவு பகலாக வேதனையுடன் தவித்தேன். உண்மையை அறிந்த பிறகே என் மனம் அபாரமாக மகிழ்கின்றது.......ஆ!....... என்ன மடத்தனம்! நமது களிப்புங் காதலும் இருக்கட்டும்.

---

சென்ற சில நிமிடத்தில் வெயர்வை கொட்டி மாவும், ஸ்னோவும் இருந்த இடம் தெரியாமல் போய் பழய கருத்த குரங்கு முக சேவையும் சரிகைப் புடவையும் ரவிக்கையும் தொப்ப உச்சவம் செய்ய உச்சு உச்சு என்ற பெருமூச்சு தாண்டவமாடுகிறது. இந்த ஒழுங்கைக் கண்டு களிக்க இது தோ!

அவை இனி எங்கும் மறையாது; அழியாது. மனத்துள் வேரூன்றி நாளுக்கு நாள் வளர்ந்துகொண்டே செல்லும். நாம் இப்போது முக்கியமாக கவனிக்க வேண்டியதுபற்றிப் பேசுவோம்.

நீங்கள் இப்போது ஒரே உறுதி வைத்துக்கொள்ளவேண்டும். தங்களை யாதரித்துத் தங்களுக்கு மகோன்னதமான பதவியைக் கொடுத்துத் தமது புத்திரியாக நடத்தி வரும் மகானுபாவனின் பொருட்டு நீங்கள் உங்கள் உயிரையும் த்யாகம் செய்ய நேர்ந்தால் மிக்க சந்தோஷத்துடன் இருக்கவேண்டும். அவருடைய இடரை நீக்கக் கடவுள் ஒருபோதும் பின்னடைய மாட்டார். பக்தர்களைச் சோதிப்பது அவருடைய லீலை. கடைசியில் தமது பரிபூர்ண கடாக்ஷத்தை யளிக்காமல் போகமாட்டார். ஆகையால் நீ கவ...... ஐயையோ......என்னை மன்னிக்கணும். மனத்திலிருக்கும் ச்வதந்திரம் வெளியிலும் வந்துவிட்டது'' என்றான்.

மணி.—அன்பா! இது பாத்திரத்தில் பிடித்து வைத்த ஜல மன்று. அல்லது பள்ளத்தில் மழை பெய்து தேங்கும் தண்ணீர் அன்று. தானாக ஊற்றுக் கிளம்பி உற்பத்தியாகும் சுத்தமான ஜலம் நாளுக்கு நாள் அதிகப்பட்டுப் பெருக்கெடுத்துப் பொங்குமேயன்றி அதைத் தடுக்கவோ, மறைக்கவோ அப்படியே அமுக்கிவிடவோ முடியுமா? ஒருபோதும் முடியாது. அதுபோலல்லவோ.............. ஸ்திரீகள் எந்த விஷயத்தையும் வெகு ஜாக்ரதையாக அடக்கியாளும் சக்தி படைத்தவர்கள் என்பது ப்ரசித்தம். ஆனால் அது எந்த நாளும் எந்த இடத்திலும் நடப்பதில்லை. தவறிவிடும்படிக்குத்தான் ஆகிவிடுகிறது. இரண்டு வருடங்களாக ஜெயித்த என்னுள்ளம் தோல்வியடையுங் காலம் நெருங்கிவிட்டதென்றதை சில தினங்களுக்கு முன்பே அறிந்துவிட்டேன். இவை எல்லாம் ஈசன் செயல். அவன் ஆட்டிவைக்கும் கூத்தாகும்.

இவ் விஷயத்தை நான் பரம ரகஸியமாக எண்ணி இருக்கி

---

திருவிழாவா! நாடகமா! பாட்டுக் கச்சேரியா! மைக்ரோபோனுக்கு சிங்காரத்தைக்கூட இழுக்கச் சக்தியுண்டா! இந்த ஆடம்பரம் எதற்கு? ஆடம்பரம் பெரிதாக இருக்கிறதே யன்றி பாட்டோ கால்வாசிக் கூட இருப்பதில்லை.

றேன். ஆனால் என்னருமை பிதா எப்படியோ தெரிந்துகொண்டா ரென்று தெரிகிறது. ஆனால் நான் அதைக் காட்டிக்கொள்ளவில்லை. ...தாங்கள் கூறுதற்கு முன்பே நான் என் பஞ்சபூத சாக்ஷியாய் என் குல தேவதையின் மீது ஆணையாய் — என் பிதாவின் மனத்துயரத்தை (ஆபத்தை) நீக்காமல்—என் மனத்திற் கிசைவ தில்லை; இதனால் என்னுயிரைக் கொடுக்க நேர்ந்தாலும் நான் தயார். என்று அம்மன் சன்னிதானத்திலேயே சபதம் செய்து ப்ரமாண மும் செய்துவிட்டேன். இனிமேல் அதனின்றும் நான் ஒருபோதும் பிசகமாட்டேன். லஞ்சம் வாங்கியதாக வந்துள்ள பழி வெகு தூரம் வேலை செய்யுமாம். இவைகளை எல்லாம் கேட்கும்போதே பயமாக விருக்கிறது. கடவுள் க்ருபையில் ஒன்றுமில்லை எனின் சரி. என் மனத்தில் திக்கு, திக்கு என்று பயம் தோன்றுகிறதே! அதற் கேற்ப ஏதேனும் ஆபத்து விளைந்து நாட்கள், வாரங்கள், மாதங்கள், வருடங்கள் சென்றுவிட்டால் தாங்கள் என்னை மறந்து விடுவீர்களா! என்மீது கொண்ட ப்ரியம் மாறிவிடுமா! என்னைக் கைவிட்டுவிடுவீர்களா?'' என்று வெகு உருக்கமாயும், உண்மையான காதல் அன்பு கண்களில் ஜ்வலிக்க, இதயத்தில் இணைத்து எழுந்து தாண்டவமாடக் கட்டு மீறிய பதைப்புடன் கேட்டாள்.

இந்த மொழியைக் கேட்ட வாஸுதேவன் அவனையே மறந் தான். இன்பமும் துன்பமும் பாதித்தவனாய் இன்னது பதில் பேசுவதென்பதை யறியாது இமைப்பொழுது திகைத்தான். அடுத்த நிமிடம் சற்று தெளிவு பெற்று. மணியின் இரு கரங்களையும் பிடித்துக்கொண்டு "ஹா! மணீ! நான் என்ன பதில் கூறுவதென்று தெரியாது விழிக்கிறேன். என் பிறவியில் நான் துன்பக்கடலில் துளைந்து கொண்டிருக்கையிலுங் கூட அதில் ஓர் இன்பக்கயிறு என்னைக் கரையேற்றி களிப்பிக்கக் கிடைத்தது போலிருக்கிறது. இதோ! இந்த ஆகாயவாணி-பூமிதேவியின் சாக்ஷியாக சபதம் செய்கி றேன். உன் பிதாவின் பொருட்டும், உன் பொருட்டும் நான் என்

---

மிகவும் ஆசை ஆசையாக எதிர் பார்த்த காரியம் ஆகாமல் தோல்வி யடைந்துவிட்டால் பிறகு எந்தக் காரியத்தையும் எதிர் பார்க்க மனம் விரும் புவதில்லை. நான்கு வைராக்கியங்களில் இதுவும் ஒன்று போலும்.

ஸ்ரீமதி
வை. மு. கோதைநாயகி
அம்மாளின்
முதல் ரிகார்டு.

# G E. 197



ஏழை முகம் பாரய்யா—
-- ஹிந்து பைரவி

போகுது பார் பணம்
— நட பைரவி

**விலை ரூ. 2-12-0**

ஏழை முகம் பாரய்யா முருகா—எந்தனை
ஆதரிக்க மனமில்லையா ? —ஏழை

ஏழை எளியரென்ற வேற்றுமை யற்ற உன்றன்
ஈடில்லாக் கிருபை செய்குவாய்
ஏழை என் மனம் வாடிடா தருள் புரிவாய்

தொகைரா

கரந்தனில் தனமிருந்தால் காருண்ய சிந்தை யில்லை
கரந்தனில் தனமற்றோர்க்கே கருணையே நிறைந்திருக்கும்
கரந்தனில் தனமும் நல்ல காருண்ய குணமும் கூடில்
கரந்தனை யடக்க அங்கோர் கருமியும் தோன்றுவானே.

எடுப்பு

வள்ளி மணாளா குகா ! எழில்
புள்ளி மயில் வாகனா ! —ஏழை

இதன் மறு பக்கத்தில் குடியின் கேட்டைப் பற்றிய பாடல் அடங்கியிருக்கிறது.


## ஆர்ஸ் கொலம்பியா ஹவுஸ்,

மதராஸ்

எல்லா " கொலம்பியா " ஏஜண்டுகளிடமும் கிடைக்கும்.

மணி.—அம்மா! நான் என்ன பதில் பேசுவேன்! அப்பாவின் அளவற்ற புகழையும், பாழும் பணத்தையுங் கண்டுதான் இவ்வித மான துர்மந்திரிகள் சேர்ந்திருக்கிறார்கள். ஐயோ! பொறாமை என்கிற நெருப்பு பற்றிக்கொண்டால் ஊரையே அதமாக்கிவிடுமே; எந்த சண்டாளர்களுக்கு இத்தகைய மகானுபாவன்மீது இவ்விதம் தோன்றியதோ மாபெரும் பழியைப் போட்டுவிட்டார்களே!... அப்பா ஏன் வரவில்லை?'' என்றாள்.

அதே சமயம் அங்கு மோட்டார் வரும் ஓசை கேட்டதும் இரு மங்கையரும் ஆவலோடு சென்றார்கள். சர்வோத்தமர் தன் னறைக்குச் சென்றார். இரு பெண்களும் கூடவே சென்றார்கள்; "அப்பா! என்ன செய்தி? ஆபீஸ் விஷயமாக ஏதேனும் தெரிந்ததா?'' என்றாள் மணி.

உத்த:—கண்மணீ! என் மனம் இப்போதே சந்தோஷமும், நிம்மதியும் அடைகிறது. ஏனெனில் நமக்குச் சத்துருக்களே இல்லை என்று முதலிலெல்லாம் நினைத்தேன். பிறகு நேர்ந்த அனுபவத்தில் சத்துருக்கள் இருப்பதைத் தெரிந்து கொண்டேன். ஆனால் இத்தனை விபரீதத்திற்கும் வருவார்கள் என்று நினைக்கவில்லை. மணீ! வேடிக் கையைப் பாரு. எனக்கு வேஷ புத்திதான் அதிகமாம். எனக்கு லஞ்சங் கொடுக்காதவர்களை எல்லாம் நான் கடுமையாக இம்சித்து வந்தேனாம். சிலரைக் கைக்குள் போட்டுக்கொண்டு அவர்களுக்கு நான் உபகாரம் செய்வதுபோல நடித்துப் பிறரை ஏமாற்றினேனாம். லஞ்சம் எனக்குக் கொடுக்கையில் கையும் மெய்யுமாகப் பார்த் தவர்கள் சாக்ஷி கூறத் தயாராக விருக்கிறார்களாம். அதோடு நான் லஞ்சம் வாங்கும்போது அப்படியே ஒரு படத்தைத் தயார் செய் திருக்கிறார்கள். அதையே நேரில் ஆபீஸுக்கு அனுப்பி வைத்திருக் கிறார்கள். இதைவிட இனி என்ன வேண்டும்?

---

இடங் கொடுப்பார்களா! முகத்தி லடித்ததுபோலப் பதில் கூறிவிட்டால் அதோடு மூஞ்சியைத் திருப்பிக்கொண்டு போகிறார்கள். என் தலைவிதி. முதலி லேயே கவுரவமாக விருந்தால்?

நான் என்னவோ இதற்கு ஒன்றும் செய்யப் போவதில்லை. உண்மையை என்றும் பரிசோதிப்பதில் ஈசனுக்கு மகா திருப்தி. அப்படியே என்னையும் செய்கிறார். எது நடந்தாலும் நடக்கட்டும். எல்லாம் அவன்மீது பாரம். அவன் ஆட்டி வைக்கும் லீலைகள். என் பூர்வ ஜென்ம கர்மம் என்று துணிந்து விட்டேன். என்னை யொரு விதமாக காராக்ரகத்தில் கொண்டு உட்கார வைத்துவிட்டு என்னுடைய கௌரவத்தைக் குலைத்து விட்டு என் சொத்துக்களை யடைந்துவிடலாம் என்பதுதான் எதிரிகளின் கருத்தாகும். விஷயம்முடிந்து விட்டதா!

கண்ணே! நான் ஒரே ஒரு ஏற்பாடுதான் செய்ய நினைத்திருக்கிறேன். அதாவது எதிரிகள் செய்யும் இத்தனை சூழ்ச்சிகளும், சதியாலோசனைகளும் இரண்டு வஸ்துக்களை கோரியல்லவா! அவ்விரண்டு வஸ்துக்களை நான் என்னுயிருடன் அக் கருமிகளுக்குக் கொடுக்கப் போவதில்லை.

ரங்க:—நாதா! இரண்டு வஸ்துக்களா! அவ்விரண்டு பொருள்கள் எவை?

உத்த:—உம். அதைக் கூறவேண்டுமா! ஒன்று கடவுள் நமக்குக் கொடுத்த செல்வம். மற்றொன்று நமது மனக் குறையை நீக்கி இன்பம் அளிக்க வந்த இணையிலாத—விலையிலாத மாணிக்கமாகிய—என் இன்பமணி. இவ்விரண்டிற்குங் கருதித்தான் இந்த காரியம் நடைபெறுகின்றது.

ரங்:—ஹா! இதற்காகவா! என்ன கொடுமை. ஐயோ!

இன்பமணி:—அப்பா! ஆ...என்ன அனியாயம். என் பொருட்டா தங்களை வருத்துவது...ஐயையோ! இந்த கொடுமையை நான் சகிக்கமாட்டேன். அப்பா! அப்பா! இதற்கோர் வழி செய்ய

---

தன் சொந்த காரியம் முடியும் வரையில் வெகு தடபுடல்தான். விசாரிப்பும் மரியாதையும் குறைவே இல்லை. காரியம் முடிந்துவிட்ட பிறகோ ஆளையே பார்ப்பதற்குக்கூட அகப்படுவதில்லை. மீண்டும் காரியம் வரும்போது இவர்களைப் பார்க்க வேண்டுமே என்கிற யோசனையே இல்லை. இத்தகையவர்கள்தான் இக்காலத்தில் பெரிய மனிதர்கள்.

வேண்டும். என்னுயிருக்கு உயிராகிய தங்களை—அனாதையாகிய என்னை மகள்போல் பாதுகாத்து வரும் தங்களையா—பேராபத்தில் காண்பது? ஐயோ! முடியாது: முடியாது. என்னால் சகிக்க முடியாது. என்னுயிர் பதறுகிறது. என் அங்கம் துடிக்கிறது. அப்பா! என்னால் தமக்கு நேரவிருக்கும் துன்பத்தை நானே தீர்த்துவிட்டுத் தான் மறு வேலை செய்வேன்.

உத்த:—கண்ணே! இதென்ன பைத்தியம். ஆவேசம் கொண்டவள்போலப் பேசுகிறாயே! அம்மா! என் செல்வக் குழந்தையே! என் மீது நீ எம்மட்டும் அன்பை—ஏன் உன் உயிரையே—வைத்திருக்கிறாய் என்பதை நான் அறியமாட்டேனா? நீ கூறவேண்டுமா? மணீ! நாம் வீண் கால தாமதம் செய்வதில் பயனில்லை. என்னுடையது என்பது ஒன்றுமில்லை; எனினும் கடவுள் எனக்குக் கொடுத்துள்ள செல்வம் முற்றும் நான் உழைத்துவந்த சொத்து என்பது அவருக்குத் தெரியும். அநியாயப் பொருளல்ல வென்பதை அவரே நிரூபிக்கட்டும். நல்ல மார்க்கத்தில் ஈசன் கொடுத்த செல்வத்தை அச் சண்டாளர்கள் அடைந்து துர்விநியோகப் படுத்துதற்கு நான் விடமாட்டேன். என் மனம் சற்றும் சம்மதிக்காது. என்னை அவர்கள் என்ன செய்தாலும் என் இன்ப மணியையும், செல்வத்தையும், அந்த பாதகர்களின் வசம் கிடைக்கும்படி விடமாட்டேன். என் செல்வமே! என் இன்பமணீ! என் வார்த்தையைக் கேட்பாயா? என்னிச்சைப்படிக்கு நடப்பாயா?......

மணி:—தந்தையே! இதென்ன தாங்கள் இப்படிக் கேட்கிறீர்கள். நான் தங்களுடைய பொருளல்லவா! என்னைத் தங்கள் இச்சைப்படி நடத்தத் தமக்கு அதிகார மில்லையா? என்னைத் தாங்கள் எப்படி என்ன செய்யச் சொல்லினும் செய்யத் தயாராக விருக்கி

---

எந்த மனிதனால் தன் ஆபத்து நீங்கி நாலு மனிதர்களின் முன்பு வருவதற்கு முகம் உண்டாகும்படி நேர்ந்ததோ, அதே மனிதரிடம் சற்றும் தயை தாக்ஷண்யமின்றி, நன்றி யின்றி தான் கொடுத்த சொல்ப பணத்திற்கு வாரண்டு முதலில் கொண்டு வந்து வருத்திய மனிதர்களின் குடும்பந்தான் வெகு நன்றாக இருக்கின்றது. உபகாரஞ் செய்தவன்......

றேன். என்னுயிரையே தங்கள் பொருட்டுத் தியாகம் செய்யத் துணிந்து விட்டேன்.

உத்த:—கண்ணே! என்னுறுதியைக் கேளு. என்னுடைய சொத்தில் ஒரு பைசாவைக்கூட துர்வினியோகத்திற்கு விடவே மாட்டேன். என்னை அவர்கள் என்ன வேண்டுமாயினும் செய்து கொள்ளட்டும். நான் இதுவரையில் தருமத்திற்குக் கொடுத்தது போக மிச்சமுள்ள சகலத்தையும் இந்த நிமிடமே பல தருமத்திற்கும் வாரி இரைத்துவிட்டு நானும் ரங்கமணியும் ஏகாங்கியாக நிற்கப் போகிறோம். எங்களுக்கு ஒரு வயிறு சோறு எப்படியுங் கிடைத்து விடும். உனக்கென்னவோ உன் பிதா வந்துவிட்டார். அவருடன் நீ தனி வாசம் செய்யவேண்டும். உனக்கென்று பொருள் கொடுத்து விடுகிறேன். உன் தந்தையின் சம்மதி பெற்று நீ வாஸுதேவனை மணந்துகொண்டு சுகமே வாழ்வை நடத்து. நாங்கள் தூர விருந்து பார்த்துச் சந்தோஷமடைகிறோம். இதுதான் என்னுடைய கடைசீ முடிவு.

மணி:—ஐயோ! இதுவா தங்கள் கடைசீ முடிவு? நான் தங்களைப் பிரியவேண்டுமா? என் அன்னையைப் பிரியவேண்டுமா:...... ஊஹூம். நான் மறுப்பதாக எண்ணவேண்டாம். தண்ணீரிலிருந்து மீனைப் பிரிப்பதால் அதன் கதி என்னவாகும்? உயிர் நீங்கும். அதே போலல்லவோ என் கதி யாகும். ஜீவதாது போன்ற தண்ணீராகிய உங்களிடமிருந்து என்னைப் பிரிப்பதால் என்னுயிர் தரிக்குமா? ஹா! அப்பா! அப்பா!—என்று கதறினாள். நிலை தடுமாறி அப்படியே சாய்ந்துவிட்டாள்.

ரங்கமணியும் உத்தமரும் மணியைத் தூக்கித் தம் மடியில் சாத்திக்கொண்டு "கண்மணி! வருந்தாதே; உன்னில்லாமை எங்களுக்

---

சில குழந்தைகள் இயற்கையிலேயே நல்ல சாதுத்தன்மையாக நடக்கின்றன. சில பழக்கத்தினால் நடக்கின்றன. இன்னும் சிலவோ இயற்கையுமில்லை; பழக்கமும் இல்லை. காட்டு மிராண்டிப் போக்காகவே இருக்கின்றன. இவைகளின் கால முடிவுக்கும் இந்த பிடிவாதமும் அசட்டுத் தனமும் போவதில்லை.

குத் தெரியும். இதோ கண் திறந்து பாரு. மணீ! மணீ!'' என்று அன்பா யழைத்தார்கள்.

மணி கண்ணுல் நீரை தாரை தாரையாகப் பெருகிவிட்ட வண்ணம் "தந்தையே! தாயே! என்னுயிர் நிலையங்களே! தங்களிரு வருக்கும் ஆகும் வழி எனக்கும் ஆகக்கூடாதா? என்னை மட்டும் ஜாக்ரதை செய்யவேண்டுமா? தாங்கள் அனுபவிக்கும் சுக துக்கத் தில் என்னையும் சேர்ப்பது கூடாதா? என்னைக் கைவிட வேண்டாம். அவர் என்னைப் பெற்ற பிதாவாயினும் என் மனம் அவரை நம்பவே இல்லை. அவரை நினைக்கும் போதெல்லாம், பார்க்கும் போதெல்லாம் எதிரியைப் போலவே தோன்றுகிறது. நானும் சொல்லலாகாதென்று எத்தனைதான் மனத்திற்குள் மறைத்தும் முடியவில்லை. இன்று கூறி விட்டேன். அப்பா! அவருடன் நான் தனித்துச் செல்லவே மாட் டேன். நான் அப்படி அவருடன் செல்லும்படி நேர்ந்தால் ஆபத்தை விலைக்கு வாங்கியதுபோலத் தானுகும். என்னுல் அதைச் சகிக்கக் கூடாது என் பிராணன் போய்விடும். அப்பா! அம்மா! என்னை விட்டுவிடவேண்டாம். சகல சொத்தையும் தியாகம் செய்துவிட்டு எதிரிகளின் கண் முன்பு மூவரும் தலை மீது துணி போட்டுக் கொண்டு போய்விடலாம். இந்தப் பாழும் வேலை செய்யவேண்டாம். இதை ராஜிநாமா செய்துவிடுங்கள். பிச்சை எடுத்தேனும் பிழைக்க லாம். அப்பா! கவலைப்பட வேண்டாம்'' என்றுள்.

உத்த:—அம்மா! நீ சொல்வது ஒரு விதத்தில் வாஸ்தவந்தான். ஆனல் நான் இவ்விடம் விட்டு இப்போது போய்விட்டால் என் மீதுள்ள பழியை நான் ஏற்றுக்கொண்டதாயும், பயந்துகொண்டு ஓடிவிட்டதாயும் அனுவசியமான பெயர் கிடைக்கும். அதற்கும் நான் இடங் கொடுக்கப் போவதில்லை. சகல சொத்தையும் தருமத் திற்கு வைத்துவிட்டு நான் மட்டும் இங்கேயே தானிருக்கப் போகி றேன். நீ என்னுடனிருப்பதால் ஆபத்து விளையும் என்று எனக்குத்

ஒன்றுக்கொன்று போட்டி இல்லாவிட்டால் உலகத்தில் எந்த காரிய மும் சீராக நடப்பதில்லை. எந்த காரியத்திற்கு அவசியம் போட்டி வேண டுமோ அவ் விஷயத்தில் எல்லோரும் தூங்குகிருர்கள். தேசம் க்ஷேமப்படுவ தெப்படி?

தோன்றுகிறது. உன் நன்மையைக் கோரி நான் கூறுகிறேன். நீ உன் பிதா வென்றவரை நம்பாதது சரியில்லை. பாவம். மனிதன் நொந்து போய்விட்டான். நீ அவருடன் தனியா யிருப்பதற்குச் சம்மதிக்கா விடில் நீ நமது ஆசிரமத்திற்குச் சென்று அங்குள்ள குழந்தைக ளுடனும் தலைவியுடனும் இருந்துவா: நமக்கு இக்காலம் இப்படியே இராது. நற்காலம் பிறக்கும். அப்போது நாம் ஒன்றாய்ச் சேரலாம். ...மணீ! ஒன்றுக்கும் அஞ்சாதே: பயப்படாதே; எம்பெருமானின் மீது பாரத்தைப் போட்டு அவரையே நம்பி யிரும்மா.

ரங்க:—நாதா! எனக்கோர் யோசனை தோன்றுகிறது. பாண்ட வர்கள் வனவாஸமும், அஞ்ஞாத வாசமும் செய்கையிலும் கூட துர்யோதனாதிகள் அவர்களுக்குத் தீங்கு செய்வதற்குத் துணிய வில்லையா! அதுபோன்று இப்பாதகர்களால் மணிக்கு மீண்டும் துன் பம் விளைந்தாலும் விளையும். நாம் வெகு சீக்கிரத்திலேயே மணிக்கும் வாஸுதேவனுக்கும் விவாகத்தைச் செய்துவிட்டால் பிறகு கவலை யில்லையல்லவா?

உத்த:—அப்படியும் செய்யலாம். இது மிகவும் நல்ல யோசனை தான். மணி! நீ என்ன சொல்லுகிறாய்?

மணி:—அப்பா! துன்பக் கடலில் விழுந்து தத்தளித்திருக்கும் போது எனக்கு விவாகமா வேண்டும்? சேச்சே! நான் அதற்குச் சம்மதிக்கவே மாட்டேன். எனக்கு எத்தகைய விபத்துக்கள் நேர்ந்த போதிலும் நான்—என்னுயிர் போவதா யிருப்பினும்—தங்கள் மனம் நிம்மதியாகும் வரையிலும் விவாகம் செய்துகொள்ளப் போவதில்லை என்று அம்பாள் சன்னிதியில் பிரதிக்ஞை செய்து கொண்டேன். அதிலிருந்து இனி நழுவமாட்டேன். நம்மை ஈசன் விட்ட வழியாகிறது....அப்பா! நேரமாகிவிட்டது. சாப்பிட

---

ஸினிமாவோ, ட்ராமாவோ! கதையின் அமைப்பினால் அழகாக இருக் கிறதை விட அதை நடிக்கும் நடிகர்களின் திறமையினால் பார்ப்பவர்களின் மனத்தில் பதிவதுதான் சிலாக்யமானது. இதற்கு நிதர்சனம் சண்டிதாஸ் என்கிற ஹிந்தி பேசும் படக்காக்ஷியே யாகும். அதன் பெருமை முற்றும் ராமி யாக நடிக்கும் உமா தேவியினாலன்றோ இருக்கிறது!

வாருங்கள்.—என்றாள். அரை குறை முடிவுடன் அவர்கள் சம்பாஷணை முடிவுற்றது.

மூவர் மூளைகளும் குழம்பிப் போய்விட்டன. ஒவ்வொருவர் ஒவ்வொரு விதமாகச் சிந்தித்தபடியே எந்த வழியில் செல்லலாம், என்ன செய்யலாம் என்று யோசித்தபடியே தம் தம் படுக்கைக்குச் சென்றார்கள். இன்பமணி காலையில் வழக்கம்போல பக்ஷிகளுக்கு ஆகாரங் கொடுத்துவிட்டுப் புஷ்பம் பறித்துக்கொண்டு வருகையில் தோட்டத்து ஒரு பாகத்தில் ரத்த வெள்ளத்தில் ஓர் ஆள் படுத்திருப்பதைப் பார்த்ததும் மனம் திடுக்கிட்டு, "ஆ இதென்ன! கோரமான படுகொலை! அம்மா! அப்பா! கொலை! கொலை! என்று மணி தன்னை மீறி ஓவென்று கத்திக் கூவினாள். இக் குரலைக் கேட்டு பங்களாவிலிருக்கும் வேலைக்காரர்கள் எல்லோரும் ஓடி வந்தார்கள்.

"ஆ! ஆ! படுகொலை! படுகொலை. கொல்லப்பட்டவன் தோட்டத்து வேலைக்காரக் கிழவனன்றோ! இதென்ன அக்ரமம்! இதென்ன அனியாயம்!" என்று எல்லோரும் இடி இடித்து நடுங்கலுற்றவர்கள் போலப் பிரமித்துப் போய்விட்டார்கள். பங்களாவே அல்லகல்லோலமாகிவிட்டது.

## 14-வது அதிகாரம்

## சதிகாரக் கூட்டத்தின் அதிகார திட்டம்

வாஸுதேவன் வழக்கம்போலத் தன் வேலையைக் கவனிப்பதற்கு தோட்டத்திற்குச் சென்றான். முதல் நாளைய சம்பவங்கள் அவன் மனத்தில் தாண்டவமாடிக்கொண்டே இருந்தன. மணியின் ரமணீயமான தோற்றமும், அவள் கூறிய அமுதமென்ன மொழியும் அவன் மனத்தில்

பிறருடைய பணத்தினாலேயே சிலர் தந்திரமாக காரியத்தைச் செய்து கொண்டு காலணா அரையணா சாமான்களைத் தம் பணத்தில் வாங்கிவிட்டு சகலமும் தாமே செய்துகொண்டதாகக் கூறிவிடுகிறார்கள். சாமர்த்ய வேலைகளில் இதுவும் ஒன்றுபோலும்.

அவனால் காண முடியாத ஆநந்தத்தை அளித்தன. இந்நிலைமையில் வேலை செய்துகொண்டிருக்கையில் உத்தமர் பங்களாவின் கொலை விஷயம் காற்றுபோலப் பரவி அவன் வேலை செய்யும் இடத்திற்கு வந்தது.

இச் செய்தியைக் கேட்டு நடுநடுங்கி வாஸு தன் கை வேலையை விட்டு விட்டு ஓட்டமாக ஓடி உத்தமரின் பங்களாவை அடைந்தான். அங்கு வீதியிலேயே ஜனக் கூட்டத்தின் நெருக்கடி கூறத்திற மில்லை. தேர் விழா, திருவிழாபோ லிருக்கிறது. ஜனங்களின் இரைச்சல் ஹோ வென்று அண்டத்தை அளாவுகிறது. இக் கூட்டத்தை விலக்கிக்கொண்டு போக முடியாமல் மெல்ல சிரமப்பட்டுக் கொண்டு வாஸு அங்கு வந்து "என்ன! என்ன! கொலையா! யாரை யார் செய்தார்கள்?" என்று கேட்டுக் கொண்டே வந்தான். வீடு அமர்க்களப் படுகிறது. இத்தனை கலாட்டாவுக்கும் உத்தமர் அங்கு வரவே இல்லை. அவர்கூட இப்படி வராமலிருப்பாரா! என்று எல்லோரும் வியப்புற்றார்கள்.

மணியும் ரங்கமணியும் உத்தமரின் அறையில் சென்று பார்க்கையில் அவர் அங்கு காணப்படவில்லை. அதிகாலையில் எழுந்து தன் நித்ய கடன்களை முடிக்கச் சென்றிருக்கக் கூடும் என்று எண்ணி பங்களாவில் ஒவ்வொரு பாகத்திலும் தேடினார்கள். ஒரு இடத்திலும் அவரைக் காணவில்லை. அவர் அறையில் கூர்ந்து கவனித்ததில் பொட்டு பொட்டாகச் சில பொட்டுகள் ரத்தம் சிந்தி இருப்பது மட்டும் தெரிந்தது. இதை முதலில் மணியே கவனித்தாள். "இதென்ன இந்த அறையில் ரத்தம் சொட்டி இருப்பதற்கு என்ன காரணம் தெரியவில்லையே! அப்பா எங்கே சென்றிருப்பார்?" என்று நிலை தடுமாறித் தவிக்கிறாள்.

இதற்குள் வாஸுவும் அங்கு வந்து சேர்ந்தான். மணியைக்

---

கடைசி நிமிடம் வரையில் கையில் பணமில்லையே காரியம் எப்படியாகும் என்று பயந்துகொண்டிருக்க, கடவுள் அது வரையிலும் நன்றாகச் சோதித்துப் பின் அந்த நிமிடத்திலேயே தோன்றாத் துணையாக உதவி செய்கிறார். கவலையும் ஒழிகிறது. கடவுளை நம்பினால் கவலை யுண்டா!

கண்டு "அம்மணீ என்ன விபரீதமிது? விஷயம் ஒன்றுமே விளங்க வில்லையே! உத்தமர் எங்கு சென்றிருப்பார்? ஐயோ! நேற்று கவலை கொண்டதெல்லாம் அடுத்த நாளே பலன் கொடுத்துவிட்டதே என்ன செய்வது?" என்று தவித்தான். மணிக்கோ பதிலே சொல்ல முடியவில்லை. மார்பு படபடவென்று அடித்துக் கொள்கிறது. நான் பயந்ததெல்லாம் நிஜமாகிவிடுமோ? இந்த பங்களாவில் இப்படியும் நடக்குமா? இந்த சமயத்தில் அப்பா எங்கே போயிருப்பார்? இதிலும் என் மனத்தில் ஏதோ திகில் தோன்றி வதைக்கிறதே. அம்மா! அப்பாவை நீங்கள் கூடப் பார்க்கவில்லையா?" என்றாள்.

இதற்குள் போலீஸார் வந்துவிட்டார்கள் உத்தமரின் உறவினர்க ளெல்லோரும் குழுமிவிட்டார்கள். பகைவர்களாக விருந்த பங்காளிகள் முதல் பலரும் வந்துவிட்டார்கள். இறந்து கிடக்கும் ஆசாமியின் வயிற்றில் குண்டு பாய்ந்து இருப்பது நன்றாகத் தெரிகிறது. பரிசோதிக்க டாக்டர்களும் கூடிவிட்டார்கள். உத்தமர் வருவதற்காகக் காத்திருந்தார்கள். அவர் செல்லுமிடமெல்லாம் சென்று விசாரித்ததில் காலை முதல் எங்கும் வரவே இல்லை என்ற தகவலே கிடைத்தது.

ஒருவருக்கொருவர் குழப்பம் அதிகப்பட்டுவிட்டது. "இவர் படுக்கும் அறையில் ரத்தம் சொட்டுவானேன்? இதற்குக் காரணம் யாதா யிருக்கும்?" என்ற சந்தேகம் பலத்துவிட்டது. அன்று சாயங்காலம் வரையில் போலீஸார் அந்த பங்களாவிலேயே காவல் இருந்தார்கள். பிரேத விசாரணை செய்ததில் தகவல் ஒன்றுமே கிடைக்கவில்லை. காலையில் திடீரென்று மணி இங்கு கொல்லப்பட்ட பிணம் இருப்பதைப் பார்த்ததும், பிறகு எல்லோரும் வந்ததாகத் தெரிந்ததேயன்றி மற்ற ஒரு விதமான புலனும் தெரியவில்லை.

---

சிலருக்கு உடம்பு ஒன்றுமில்லாமல் இருக்கையில் அவர்களுடைய சோம்பேறித்தனத்தினால் ஏதோ நோய் கொண்டவர்கள்போலக் காணப்படுகிறார்கள். பார்ப்பவர்களுக்குத் திகிலுண்டாகிறது. அவர்களுடைய வேலையும் கெடுகிறது. பாழுஞ் சோம்பலை உதறித் தள்ள முடியாதா ?

ரங்கமணிக்கும் இன்பமணிக்கும் மனம் தத்தளிக்கின்றது. எத்தனை சமாதானம் செய்தும் அடங்கவே இல்லை. பிரேத பரிசோதனையில் துப்பாக்கியால் சுட்டிருப்பதாகவும், இறந்தது இரவு சுமார் 1 மணிக்கு இருக்கலாமென்றும் இது கொலையே யன்றி தற்கொலை யில்லை; கொல்லப்பட்ட மனிதன் எதிர்பார்க்காமல் திடீரென்று கொலை செய்யப்பட்டிருக்கிறான். என்று வைத்தியர் கூறிவிட்டார்.

நிமிடம் ஏற ஏற ஒவ்வொருவருடைய மனமும் பதைபதைக்கிறது; தத்தளிக்கிறது. மணியும் ரங்கமணியும் தீர்த்தங்கூடச் சாப்பிடவில்லை. உத்தமரின் உத்யோக சாலையில் சென்று விசாரித்ததில் வரவே இல்லை என்று தெரிந்தது. அன்று பொழுது முற்றும் காத்திருந்து பின்னர் மேற்படி வேலையை நடத்துவது என்று தீர்மானித்தார்கள். இன்ஸ்பெக்டர் முதல் சகல உத்யோகஸ்தர்களும் வீட்டை விட்டுச் செல்லாமல் கவனித்து வந்தார்கள். அன்று முற்றிலும் கழிந்துவிட்டது; உத்தமரைக் காணவில்லை. வாஸு அன்று வேலைக்குச் செல்வதை அடியோடு மறந்தான். அவன் மனத்தின் தவிப்பைக் கூறவே திறமன்று. தாமரை இலை நீர்த் துளி போல அலைகிறது.

ரங்கமணி:—மணீ! என் செல்வீ! என்னால் சகிக்க முடியாது. என்னுயிர் நிலை தடுமாறித் தத்தளிக்கிறது. நான் இனி பொறுக்க மாட்டேன்; என்னுயிரை நான் விட்டு விடத்தான் போகிறேன். நமக்கு ஏதோ பெரும் ஆபத்து வந்து விட்டது. கடவுள் நம்மை அனியாயமாய் அளவுக்கு மீறிச் சோதித்துவிட்டார். உன் பிதாவை என்னவோ வீட்டில் காணவில்லை. இதுவே எனக்குப் பெரிய சந்தேகமா யிருக்கிறது. நான் உயிர் வாழமாட்டேன்.

மணி.—(தாயின் இரு கரங்களையும்பிடித்துக்கொண்டு) அம்மா! அம்மா! இதென்ன வார்த்தை. தாங்கள் பொறையில் பூமிதேவி

ஒரே வேலையை—அந்த தொழிலைச் செய்யும் பல தொழிலாளிகளிடம் ஒருவருக்குத் தெரியாமல் மற்றவருக்காகக் காட்டி கூலி விசாரிக்கையில் ஒவ்வொருவரும் ஒவ்வொரு தினுசாகக் கூறுகிறார்கள். தன் வேலைதான் உயர்த்தி என்றும், மற்றவர்களுடையது மட்டம் என்றும் குறை கூறுகிறார்கள். பிறகு

யாயிற்றே! தாங்கள்கூட இப்படிச் சொல்லி விடலாமா! அம்மா! கேவலம் உங்களுடைய நிழலில் ஓர் உயிராக வாழும் என் கதியைத் தாங்கள் கவனியாது கூறுவது தர்மமா! அப்பா எங்கும் போயிருக்க மாட்டார். அவர் வந்து விடுவார்; கவலைப்படவேண்டாம்.

ரங்க:—அம்மா! மணி! என் கவலை உனக்குத் தெரியவில்லையே! ஐயோ! என் கதியை—ஏன், நம்முடைய கதியை—சற்று சிந்தித்துப் பாரு. கற்பகத்தருவைப்போன்று இருந்த உன் தந்தையை திடீரென்று காணவில்லை யெனின் நாம் என்ன நினைப்பது? நேற்று உன் தந்தை கூறிய விஷயங்கள்படிக்கு நடப்பதற்குள் இத்தகைய பேராபத்து நேர்ந்து விட்டதே! கண்ணே! அதோ பாரு. அவருடைய மனிதர்களெல்லாம் இப்போதே என்ன அட்டகாஸம் செய்கிறார்கள் பாரு. இன்றே இத்தகைய ஆடம்பரம்—அதிகாரம்—செய்யத் துவக்கியவர்களின் மனத்தில் என்ன எண்ணம்—எத்தகைய தைரியம்—இருக்க வேண்டும் பாரு. நாம் கேவலம் ஒன்று மறியாத பெண் பிள்ளைகள்; நாம் என்ன செய்யக் கூடும்? எல்லோரையும் அடக்கி விடலாம். நாமே செங்கோல் செலுத்தலாம் என்ற பெரிய தலைத் திமிர் கொண்டல்லவோ ஒருநாளுமின்றித் திருநாள்போல இந்த நாட்டியம் ஆடுகிறார்கள். கண்மணி! இவ் வீட்டையும் நம்மையும் விஷம்போல் மதித்தவர்களுக்கு இன்று திடீரென்று நம்மீது இரக்கமும், அக்கரையும் வந்துவிட்டதா! இவை யெல்லாம் பார்க்கப் பார்க்க என் மனம் அப்போதிலிருந்து தத்தளிக்கிறது. அதனால் வாய் விட்டுக் கூறிவிட்டேன். எந்த சமயம் என் நிலைமை எப்படியாகுமோ தெரியாது.—என்று தேம்பித் தேம்பி புலம்புகிறாள்.

மணி என்னது பேசுவது, எவ்விதம் தேற்றுவதென்றே தெரியாமல் தத்தளிக்கிறாள். இதற்குள் அங்கு கூடிய கூட்டத்தில் பலவிதமான வார்த்தைகள் பிறக்க வாரம்பித்து விட்டன. தான் பெரிய மனிதன், கலியுகக் கர்ணன் என்ற பெரிய பெயர் வாங்கி

---

எல்லோரையும் விசாரித்த விஷயம் தெரிந்ததும் வேலை எங்கே தம் கையை விட்டுப் போய்விடுகிறதோ என்ற பயத்தால் வலுவில் வந்து, கூலியைக் குறைத்துச் செய்வதாகக் கூறுகிறார்கள். இதென்னவென்றால் வியாபாரத்தின் லீலையாம்.

விட்டு லஞ்சம் வாங்கிய திருட்டு வெளியானதும் அவமானம் தாங்காமல் ஓடி விட்டானே என்னவோ! எங்கேனும் பிராணனை விட்டு விட்டானே என்னவோ! வெளியில் தலைகாட்ட இனி யோக்யதை ஏது? முகமேது?'' என்று ஒரு சாரார் பரிகஸிக்கின்றார்கள்.

மற்றொரு சாரார் ''ஊம்; அது சுத்த முட்டாள் தனம். அப்படியொரு நாளும் இருக்காது. அவனாவது ஓடி ஒளிந்துகொள்வதாவது. இதெல்லாம் வேறு விதமாகத்தான் நடந்திருக்க வேண்டும். அந்த அனாதைச் சிறுக்கி இருக்காளே! அவள் சாமான்யமானவளல்ல. சமயம் பார்த்து வேலையை முடிக்க வெகு நாளாக அந்த செட்டியின் தோட்டத்து வேலைக்காரப் பையனுடன் யோசனை செய்துகொண்டு வந்தாள். இந்த சமயம் தன் சாமர்த்தியத்தைக் காட்டி வேலையை முடித்துவிட்டால் தான் தப்பித்துக் கொள்ளலாம் என்று யுக்தி செய்துவிட்டாள். இத்தனை நாள்வரையி லில்லாமல் இப்போது அவளுக்கு அப்பனும் ஒரு அனாமதேயத்தை வீட்டில் தனக்கு உதவியாக வரவழைத்துக் கொண்டாள்.

ஏன் சார்? என்னவானாலும் அது வீதியில் திரிந்து சோற்றுக்கு சப்த தாளம் போட்ட சோம்பேறி யல்லவா? அல்பம்; பன்னாடை; வீடு கூட்டியின் மகள். அதன் புத்தி எப்படி இருக்கும். வளர்த்தவன் மீது வாஞ்சை எவ்விதம் வரும். அவன் வேண்டுமானால் ஏமார்ந்தான். இதன் கொடும் துர்ப்புத்தி தானே இதற்கு இருக்கும். இச்சமயம் அவனைக் கொன்றுவிட்டால் சகல சொத்துக்கும் தானே இளவரசி ஆட்சி செய்யலாம். இந்த அவமானத்தினால் அவன் எங்கேயோ ஓடிவிட்டான் என்ற பட்டத்தைச் சூட்டிவிடலாம் என்று தீர்மானித்துப் பூனை போலச் செய்துவிட்டாள். ரங்கமணிக்கு என்னவோ பாபம் ஒன்றுமே தெரியாது சாது. அவள் கதிதான் அதோ கதியாகிவிட்டது. உத்தமன் அறையில் ரத்தம் சிந்தி இருப்பதையும், முன்பின் நடந்த விஷயங்களையும் ஒட்டிப் பார்த்தால் உத்

---

வரதக்ஷிணை பேரம் இடையில் சற்று குறைந்ததுபோலத் தோன்றியது. ஆனால் மீண்டும் அதற்குப் புத்துயிர் வந்து விட்டதுபோல எஸ். எஸ். எல். ஸி: என்றால் இத்தனை. எப், எ. என்றால் இத்தனை, பி. எ. என்றால்...ஆனர்ஸ் என்றால், எம். ஏ என்றால்...இப்படி எல்லாம் புதிய திட்

தமரைக் கொலை செய்து எங்கேயோ மறைத்துவிட்டதாகத் தெரிகிறது. இங்கு கொல்லப்பட்டுள்ள வேலைக்காரன் அந்த விபரீத ரகஸ்யத்தைப் பார்த்துவிட்டிருக்கலாம். அதனுல் உடனே அவனையும் கொலை செய்துவிட்டார்கள். இவனுல் சங்கதி வெளியாகிவிட்டால் என்ன செய்வது என்ற பயமிருப்பது சகஜமல்லவா? வெகு துரிதமாக வேலையைச் செய்து முடித்துவிட்டார்கள். அதன் பலன் இனி மேலல்லவோ தெரியும்.

ஆமாம். அவள் தகப்பன் என்று வந்த ஆசாமியைக் காணவில்லையே! இத்தனை தடபுடலுக்கும் அவன் ஏன் வெளியில் வரக் காணவில்லை. ஒரு வேளை உத்தமர் சவத்தை மறைக்கச் சென்றிருக்கலாம். இல்லை யெனில் இன்னும் என்ன சூழ்ச்சிகள் நிகழ்ந்திருக்கின்றனவோ! என்றெல்லாம் தாறுமாருக விஷயங்களை ஒன்ரோடொன்று பிணைத்து முடிவு கட்டிப் பேசிக்கொள்ளும் அனியாயத்தைக் கேட்டு மனந் தாங்காத சிலர் தவிக்கிறுர்கள்.

இவ் வனியாயச் சொற்கள் வாஸுதேவனின் காதில் ஈயத்தைக் காய்ச்சி யூற்றியதுபோலச் சுரீலென்று பாய்ந்தன. வதங்கித் துவண்டு போன கொடிபோன்று கிடக்கும் மணியின் செவியிலும் இம்மொழிகள் பட்டதும் பெரும் எரி மலையே தன்மீது விழுந்து தன்னைத் தாக்குவது போன்ற ஆவேசத்துடன் "ஹா! அனியாயமே! அக்ரமமே! இம்மாதிரியா நீங்கள் கட்டுக் கதையைத் தொகுத்து விட்டீர்கள். ஐயோ! பாவிகளே!" என்று கத்தியவாறு கிளம்பினுள்.

இதைப் பார்த்த வாஸு, "அம்மணீ! வேண்டாம், போகவேண்டாம். துஷ்டரைக் கண்டால் தூர விலகு என்கிற வாக்கியத்தை மறந்துவிட்டீர்களா! இவர்கள் எல்லோரும் வேண்டுமென்றே கக்ஷி கட்டிக்கொண்டு இவ்விதம் பேசுவதை நானும் அப்போதிலிருந்து கேட்டுச் சகித்துக் கொண்டுதானிருக்கிறேன். சேற்றில்—நரகலில்—

டங்கள் தோன்றி விட்டன. அத்தனை பட்டங்களைப் பெற்றுப் படித்த பிள்ளைகளின் மூளையுமா கலங்கி தம்மை விற்பதற்குச் சம்மதிக்க வேண்டும். ஐயோ! வெட்கக் கேடே!

கல்லை எறிந்தால் அது முகத்தில் அல்லவோ தெறிக்கும். அயோக்ய சிகாமணிகளான கூட்டத்தில் நீங்கள் நியாயத்தைக் கூறக் கிளம்பினுல் அது பலிக்குமா! ஒருபோதும் பலிக்காது. இதையோர் ஆதாரமாகக் கொண்டு இதற்குக் கண்ணும் மூக்கும் வைத்து இன்னும் ஆபத்தான வழியில் ஜோடித்து விடுவார்கள். வீணுக ஆத்திரப்பட்டு துராத்மாக்களிடம் வாயை விடாதே; கடவுள் ஒருவரில்லையா? அவரை நம்பி தோத்திரம் செய்து வேண்டிக்கொள்ளு'' என்று தைரியங் கூறினுன்.

எரியும் கோரமான அக்னியில் ஒரு துளி ஜலம் விட்டால் அது அணைந்துவிடுமா? ஏற்கெனவே வேதனை என்ற சிறு நெருப்பால் வருந்தும் மணிக்குத்தான் கனவிலும் நினைக்காத அபாரமான கொடிய வார்த்தைகளை—கட்டுக் கதைகளை—கேட்டவுடன் அவளுடைய அங்கமே தீப் பிடித்து எரிவது போலாய்விட்டது. ஐயையோ! என் பிதாவையா—என்னுருயிர் தந்தையையா!—என்னை வளர்த்து வந்த என் கருணைவள்ளலையா—நான் கொலை செய்துவிட்டேனு! ஹா! ஹா! இது சகிக்கக்கூடாதது; என்னுல் பொறுக்க முடியாதது. அம்மா! அனியாயத்தைக் கேட்டீர்களா! ஐயையோ! என் தலையில் இடி இடித்தது போல இப் பாதகர்கள் பேசுவதைப் பாருங்கள்.'' என்று அடித்துக்கொண்டு தலைவிரி கோலமாக ரங்கமணி யிடம் ஓடி முறையிட்டாள்.

இந்த அனியாய வார்த்தைகளைக் கேட்டுப் பிரக்ஞையே யற்றுவிட்டாள். பங்களாவின் குழப்பமோ கூறவே திறமன்று. அத்தகைய அல்லகல்லோலமான பங்களாவில் மூன்று உயிர்களே தத்தளிக்கின்றன...மணிகள் பல சென்றன. ஒன்று, இரண்டு, மூன்று நாட்களும் ஆய்விட்டன. கொலை செய்யப்பட்ட சவத்தை யடக்கமும் செய்தாயிற்று.

---

நாடகம் பார்க்கச் செல்லும் மனிதர்கள் பலருக்குப் பலவித எதிர்பார்ப்பு. நாடகம் ருசிகரமானதா—பாட்டு நன்ரு யிருக்கிறதா—நடப்பு திறமை பெற்றதா—நடிகர்கள் அழகா யிருக்கிருர்களா—ஸீன்கள் சிறப்பா யிருக்கின்றனவா!—இப்படி பலவிதம். மத்தியிலுள்ள சோதாக்களுக்கோ இந்த ஏமாந்த நேரத்தில் அகப்பட்டதைச் சுருட்டிக்கொள்ள நினைவு.

உத்தமரின் தகவலே கிடைக்கவில்லை. இந்த மனிதனை யார் கொலை செய்திருப்பார்கள் என்றதற்கு சாக்ஷியமும் கிடைக்கவில்லை. போலீஸாரின் சாமர்த்யங்களைக் கேட்கவேண்டுமா! எப்படி எப்படி மொட்டைத் தலைக்கும் முழங்காலுக்கும் ஜோடித்து வழக்கைக் கொண்டு வரலாம் என்று பலமான—தீவிரமான—யோசனைகளைச் செய்கிறார்கள்.

எரிகிற வீட்டில் கொள்ளை யடித்தது லாபம் என்பது போல உத்தமரின் பங்காளிகள் "உத்தமரின் வார்சுதாரர்கள் நாங்கள்தான்' என்று அட்டகாஸமாக அன்றே வந்தவர்கள் வீட்டை விட்டு வெளியேறவே இல்லை. சொந்தமாக உட்கார்ந்து உத்தமர் விஷயமாக பிரயாசை எடுத்துக்கொண்டு வேலை செய்வதாக ஆரம்பித்துவிட்டார்கள்.

ரங்கமணிக்கு இந்த சகவாஸமும், அட்டகாஸமும் சற்றும் பிடிக்கவில்லை. என்ன செய்வதென்று யோசித்தாள். எதற்கும் தைரியத்தைக் கைவிடலாகாதென்று தன் புருஷன் கூறிய வார்த்தைகளைச் சிரஸாக வகித்து அவர்களை நோக்கி "ஐயா! என் புருஷனுக்குச் சற்றும் பிடிக்காத உறவினர்களாகிய நீங்கள் அவர் கண் முன்பு ஒரு நாளும் வராமல் இப்போது வந்து இவ்விதம் செய்வது எனக்குப் பிடிக்கவில்லை. நீங்கள்தான் அக்கரைக்காரர்கள் என்ற நாட்டியத்தை நடிக்கவேண்டாம். என் குடும்ப விஷயத்தை நான் கவனிக்க எனக்குச் சக்தியுண்டு. நீங்கள் செல்லலாம்.'' என்று சாந்தமாகக் கூறினாள்.

இதைக் கேட்ட அக் கூட்டத்தினர் பரிகாசமாக நகைத்து விட்டு "ஓகோ! உத்திரவு பலமாக விருக்கிறதே! உங்களுடைய கதி இப்போது எப்படி இருக்கிற தென்பதை சற்று கவனித்துப் பார்க்கலாம். போலீஸார் தூங்குமூஞ்சிகள் அல்ல. உத்தமர் விஷயத்தைப் பற்றி தீவிரமாக ஆராய்ச்சி செய்துகொண்டு வருகிறார்கள். நீங்கள்

---

கல்யாணத்திற்கு மாப்பிள்ளைக் கிடையாத தவிப்பு. எங்கேனும் இருந்தால் ஆயிரம் சொத்தால் பேச்சு. சுமாராகக் கூடி விட்டால் கல்யாணப் பந்தலிலேயே சண்டை. அதுவும் இல்லை என்றால், விவாகம் முடிந்த உடனே பெரிய மனஸ்தாபம். என்ன சம்மந்தம் வேண்டியிருக்கு?

எங்களை அதிகாரம் செய்ய யாதொரு பாத்யமும் கிடையாது. நீங்கள் இனி ஜீவனாம்சப் பேர்வழிகள் தான் என்பது நினைவிருக்கட்டும். பிள்ளை இல்லாத சொத்துக்குப் பாத்யம் நாங்களே யாவோம். உரிமை எங்களுடையது. அந்த தெருவில் போகும் அனாதைக்கு இதுகாறும் சர்வாதிகாரம் கொடுத்ததுபோல இனியும் கொடுக்க முடியாது. அந்த அல்ப நாயின் கதி எப்படி முடியும் என்பது இன்னும் இரண்டொரு நாளில் தெரியும். அனேகமாகக் குற்றவாளியே அவள்தான் இருக்கலாம் என்று போலீஸார் கருதுகிறார்கள். தக்க சாக்ஷிகள் சில கிடைத்துவிட்டன. அதற்குமேல் கைது செய்யவேண்டியதுதான். தெரியுமா! பெட்டை பெருதன ஆட்டம் வேண்டாம்.'' என்று ஒரே இறைச்சலாகக் கூறி நகைத்தார்கள்.

அந்தோ! இந்த கொடுஞ் சுடு சரம் போன்ற வார்த்தைகளைக் கேட்டதும் ரங்கமணியின் உயிர் பெரும் பாகமும் நீங்கிவிட்டதென்றே கூறலாம். அப்படியே வேரற்ற மரம்போலச் சுருண்டு கீழே விழுந்தாள். இவ்விஷய மறிந்த மணி ஓடோடி வந்து தாங்கவியலாத ஆத்திரமும் துக்கமும் பொங்கியவாறு ரங்கமணியைத் தூக்கித் தன் தோள்மீது சாற்றிக்கொண்டாள். தடாரென்று கீழே விழுந்ததனால் தலையிலடிபட்டு ரத்தம் ஒழுகுகிறது.

இன்பமணி காளிகா தேவிபோலச் சீற்றங் கொண்டு "ஐயோ! அனியாய காலமே! அக்ரமக் கூட்டமே! பூமிதேவிக்கு ஒப்பான என் அன்னையைக் கண்டு என்ன கூறினீர்கள்? என் அன்னையா ஜீவனாம்சக்காரி! என் அன்னையா அந்த பதத்திற்கு அருக முடையவள். ஐயையோ! சகல சம்பத்திற்கும் உரிமை பெற்ற ஸ்ரீ மகாலக்ஷ்மியன்றோ என் அன்னை! அவர்கள் வீட்டிலேயே இருந்து அவர்கள் சோற்றையே தின்றுகொண்டு அவர்களுக்கே தீமை

---

கையில் பணமில்லாவிட்டால் " இல்லையே! இந்த செலவுக்கு வேண்டுமே'' என்கிற கவலை. காசு நடமாட்ட முள்ளவர்களுக்கோ " பிறர் கடன் கேட்காதிருக்க வேண்டுமே!'' என்கிற பயம். இரண்டு மனிதர்களும் கவலைப் படுவதில் ஒன்றாகி விடுகிறது. சந்தோஷ மெங்கே?......

எண்ணி நெஞ்சும் மனமும் துணிந்து எப்படி இந்த பதத்தைக் கூறினீர்கள்? மகா பாவிகளே! அம்மா! அம்மா!'' என்று கதறியவாறு ரத்தத்தைத் துடைத்தாள்.

ராக்ஷஸக் கூட்டம் போல உட்கார்ந்திருந்த ஆணும், பெண்ணும் இந்த வார்த்தையைக் கேட்டதும் ஏளனமாயும், பொருமையாயும் சிரித்துக்கொண்டே, "அடேயப்பா! அட்டகாஸமும் அதிகாரமும் பலமாக விருக்கிறதே? ஏய்! தெருவில் பொறுக்கும் செங்கி உன் பவிஷை, உன் ஊழலை மறந்துவிட்டாயோ! ஐயோ! அம்மாவாம், அம்மா! பாவம். வெகு கஷ்டப்பட்டு உன்னைப் பெற்றாளல்லவா! சீச்சீ! வெட்கங் கெட்டவளே! ஒண்ட வந்த பிடாரி ஊர் பிடாரியை ஓட்டிய கதையைப் போல இருக்கிறது. பிண்டத்திற்குத் திண்டாடி தெருவிலலைந்த அனாதையை, நாயைக் கழுவி நடு உள்ளே வைத்தது போல தங்கப் பூண் கட்டி தடபுடலாக வைத்தாலும் அதன் குப்பை தின்னும் புத்தி போகாததுபோல உன் இழி குலத்தின் புத்தி உன்னை விட்டுப் போகுமா? ஊம்: இத்தனை நாளும் போல இனியும் அட்டகாஸம் செய்யலாம் என்று நினைக்காதே: இனி நீ பழைய செங்கிதான் என்பதை நினைத்துக்கொள்ளு. உன் கதி என்ன ஆகப்போகிறது தெரியுமா! உத்தமரின் கொலையைப் பற்றிக் கவனிக்க மனிதர்கள் இல்லை; இது இப்படியே போய்விடும் என்று எண்ணவேண்டாம். இந்த வீட்டில் உண்டு உருட்டி நாசம் செய்து, உண்ட வீட்டிற்கு இரண்டகம் நினைத்து அந்த தர்ம தேவதையையே உன் மனமும் கையும் துணிந்து கொலை செய்துவிட்ட மகாபாவி நீ என்பதைக் கூடிய சீக்கிரத்தில் உலகமே அறியும்.

ரத்த சம்மந்தம் பெற்ற நாங்கள் கூடவா பேசாமல் உன்னைப் போல துரோகியாக விருப்போம். எங்களுடைய குடும்பத்து மனிதர்களில் பெரிய மனிதராக முதன்மை ஸ்தானம் வகித்திருந்த உத்தமரின் விஷயத்தில் நாங்கள் முழுத் திறமையையுங் காட்டி இந்த விஷயத்தைக் கண்டுபிடிக்கப் போகிறோம். அப்போதல்லவோ உன் வண்டவாளம் வெளியாகும். சீச்சீ! வெட்கங் கெட்டவளே! போ வெளியில்'' என்று சற்றும் கூசாமல் அதிகார தோரணையுடன் கூறினார்கள்.

இதற்குமேல் என்ன வேண்டும். மணியின் தேகமே குன்றிப் போய்விட்டது. இந்த துராத்மாக்களுக்கு எதிரில் நின்று பதில் கூறவும் மனம் வெறுத்தது;எனினும் ஆத்திரத்துடன்“சீச்சீ!சண்டாளர்களே! உங்கள் நெஞ்சழுத்தத்தையும், த்ரோக எண்ணத்தையும் நான் கூறவேண்டுவதில்லை. உலகமே அதை யறியும். யார் யார் எத்தகையவர்கள்,என்ன செய்திருக்கிறார்கள் என்பதைக் கடவுள் ஒருவன் பார்த்துக்கொண்டுதா னிருக்கிறான். வீணாக வாயை விட்டுக் கொட்டி உளறவேண்டாம். கெட்டிக்காரன் புளுகுக்கும் எட்டுநாள் தான் வாய்தா, என்பதை மறக்க வேண்டாம். என்று ஆத்திரத்துடன் கூறிவிட்டு, தன் தாயாரைத் தூக்கமாட்டாது தூக்கிக் கொண்டு உள்ளே சடக்கென்று சென்றுவிட்டாள்.

உட்கார்ந்திருந்த எல்லோரும் கலகலவென்று கையைக் கொட்டி நகைத்தார்கள். மணிக்கு இன்னது செய்வதென்று தோன்றவில்லை.ரங்கமணிக்குச்சற்று தெளிவு உண்டாகியதும் நடந்த விஷயங்களைக் கூறினாள். அதைக் கேட்ட ரங்கமணிக்கு முன்னிலும் பன்மடங்கு அதிகரித்த துக்கம் வந்துவிட்டது. “அம்மா! என்னையே ஜீவனம்சக்காரி என்று வாய்கூசாது பேசியவர்களுக்கு உன்னைப் பார்த்துப் பேசுவது ஒரு வியப்பா! கண்மணி! தாமரை இலை நீர்த் துளி என்றும், அலைகடல் துரும்பு என்றும், சுழல் காற்றிலகப்பட்ட மரக்கலம் என்றும் கூறுவார்கள். தற்போது நமது நிலைமை, அவைகளை எல்லாம் விட மிகவும் கேவலமாக விருக்கிறது. அவைகளுக்கு எங்கேனும், எப்போதேனும் ஓர் முடிவு கிடைக்கலாம். நம்முடைய இன்னிலைமைக்கு முடிவு என்னுயுள் முடிவு ஒன்றுதான் என்று தோன்றுகிறது. உன்னுடைய பிதாவையும் இவ் விரண்டு மூன்று நாட்களாகக் காணவில்லையே. அவர் எங்கே போயிருக்கலாம். நீ அவர் வந்த நாள் முதல் சந்தேகப்பட்டதற்கு ஏற்றார்போல இப்போது அவரைக் காணவில்லையே! என்ன செய்வது. நான் பிராண த்யாகம் செய்துகொள்வதற்குள் உன்னை நான் யாரிடம் ஒப்புவிப்பேன்?

மணீ! இனி நான் அரை விநாடி கூட வாழ முடியாது. இவர்கள் செய்யும் அட்டகாஸத்தைப் பார்த்தால் நான் கேவலம்

அடிமையிலும் அடிமையாக விருந்தாலன்றி இங்கிருக்க முடியாது. நானோ திக்கற்ற பெண்பிள்ளை. என்றைக் கிருப்பினும் பெண் ஜென்மத்திற்கு பயத்தைத் தவிர வேறு என்ன உண்டு.நான் வாயற்ற பூச்சி என்பதை அவர்கள் அறிந்திருக்கிறார்கள். நான் என் னதிகாரம் செய்து அவர்களை விரட்டுவதற்கு எனக்கு ஆணிலோ பெண்ணிலோ திக்கில்லை. நானாக தலை நிமிர்ந்தால் அப்பாவுக்குச் செய்த முடிவை எனக்கும் உடனே செய்துவிடுவார்கள். போலீஸி லெல்லாம் தகவல் கொடுத்தும் மூன்று நாளாகியும் யாதொரு விஷயமும் தெரியவில்லை. இந்தப் பாதகர்கள் அதற்கு முட்டுக் கட்டை போட்டு வேலை செய்திருப்பார்கள். சமயம் பார்த்து கழுத் தில் கத்தியை வைக்கத் தீர்மானித்து ப்ளாட்டு செய்து கொண்டிருந் தார்கள்; இப்போது செய்தும் விட்டார்கள். கண்ணே! உன்னை நான் என்ன செய்யட்டும். என் மனங் குழம்புகின்றதே!'' என்று கண்ணீர் காட்டு வெள்ளம் போலப் பெருகியவாறு மணியை இறுகத் தழுவிக்கொண்டாள்.

"அம்மா! அருமை அம்மா! தாங்களும் இவ்விதம் கூறும்படி யான நிலைமை ஏற்பட்டுவிட்டதே! தங்களுக்கு என்ன முடிவு ஏற் படுகிறதோ அதே முடிவு எனக்கும் ஆகட்டும். என்னைக் கைவிடா தீர்கள். அம்மா! என் பிதா வென்று வந்த மனிதனை நான் முதலி லேயே நம்பாததால் இப்போது அது சரியாகிவிட்டது. அந்த மனிதனைக் காணாததனாலேயே இன்னும் சந்தேகம் அதிகரித்து விட்டது. அம்மா! தாங்கள் தைரியத்தைக் கைவிடலாகாது. தாங்கள் என் அனாவசியமாக பிராண த்யாகம் செய்யவேண்டும். இந்த மனிதர்களுக்கு இப்படியே இடங் கொடுத்தால் காரியம் விப ரீதமாகிவிடும். நம்மால் கூடியவரையில் ஒரு கை பார்த்துவிட்டுத் தான் விடவேண்டும். தாயே! நீங்கள் அதைர்யப் படவேண்டாம்.'' என்று தேறுதல் கூறினாள்.

தன் பிதாவுக்கு வந்துள்ள சில கடிதங்களைப் போலீஸாரிடம் தாக்கல் செய்துவிட்டால் இந்த கொலை நடந்ததற்கும், அப்பா காணாதுபோனதற்கும் சாக்ஷி ஏற்பட்டுவிடும் என்று எண்ணி மணி தன் பிதாவின் அறைக்குள் சென்று கதவைத் தாளிட்டுக்கொண்டு கடிதங்களைத் தேட வாரம்பித்தாள்.

அவைகளில் ஒரு கடிதமாவது அங்கு அகப்படவில்லை. எத்தனை பெட்டிகள் உண்டோ அத்தனையிலும் தேடிப் பார்த்தாள். தமக்குச் சாதகத்தை யளிக்கக்கூடிய ஒரு துண்டு கடிதங் கூடக் கிடைக்கவில்லை. இவைகளை எல்லாம் பார்த்தால் மணிக்குப் பின்னும் சந்தேகங்கள் பலத்துவிட்டன. "நாமும் அம்மாவும் இவ்விடத்தை விட்டு அசைவதில்லை. என்னதான் நடக்கிறதோ ஒரு கை பார்த்துவிடுவதே சரி'' என்ற துணிபு உண்டாகிவிட்டது.

பின்னும் சில நாட்கள் ஆய்விட்டன. உலகம் பல விதம் என்பதுபோல இந்த விஷயத்தைப் பற்றி பல பேர் பலவிதமாகப் பேசவாரம்பித்தார்கள். உத்தமரின் நற்குணத்தையும், தர்மத்தையுங் கண்டவர்கள் "இப்படியும் அனியாயம் நடக்குமா?'' என்று மனந் தவித்து வாடுகிருர்கள். தங்களாலாகிய ப்ரயத்தனத்தைச் செய்து இவ்விஷயத்தில் பெரும் வெற்றி காணவேண்டும் என்று எண்ணியவர்களாய் ரங்கமணியைக் காண வந்தார்கள்.

ரங்கமணியின் நிலைமையோ கூறச் சாத்யமன்று. துரும்பென மெலிந்து மனம் நொந்து வெந்த புண்ணுகி படுக்கையோடு படுக்கையாகிவிட்டாள். அந்த கோரமான காக்ஷியைக் கண்ட வந்தவர்கள் வாய்விட்டு அலறி அழுதுவிட்டார்கள். தாயே! தரும தேவதை என்ருல் எஜமானுக்கும், பூமிதேவி என்ருல் தமக்கு மன்ருே பொருந்தும். இத்தகைய நல்லவர்களுக்கு ஈசன் இப்படிப் பட்ட கஷ்டத்தை யுண்டாக்கிவிட்டாரே! தாயே! தாங்களே இவ்விதம் நோய் வாய்ப் பட்டு எதையுங் கவனியாதிருப்பின் காரியம் நடக்கும் வழி எப்படியாகும். பரம யோக்ய சிகாமணியாகிய உத்தமருக்கு எங்களாலாகிய உதவியைச் செய்வதற்கு—எங்கள் உயிரையே கொடுப்பதற்கும்—தயாராக விருக்கிருேம். தாங்கள் இது விஷயத்தில் தங்களால் கூடியவரையில் முற்றிலும் பார்த்துவிட்டு அதற்குமேல் ஈசன் செயல் என்று இருக்கலாம். இப்போதே மவுனமாக விருந்தால் எதிரிகளுக்கு இன்னும் அனுகூலமல்லவோ ஆய்விடும்?'' என்று தேறுதல் கூறினுர்கள்.

இதைக் கேட்ட ரங்கமணி கண்ணீர் பெருகியவாறு "ஐயா!

நீங்களெல்லோரும் இவ்வளவு பிரீதி வைத்துப் பேசுவது எனக்குப் பெரிய ஆறுதலாக விருக்கிறது. எனினும் இரவு என்னிடம் நன்ருகப் பேசிவிட்டுத் தம் படுக்கை யறைக்குச் சென்ற மனிதரை திடீரென்று காணுது பறி கொடுத்து விட்ட என் கதியை நான் என்னவென்பேன்? மேருவுக்குச் சமமான அத்தகைய மனிதரையே காணவில்லை. இனி இச் சொத்தைப் பற்றியா நான் கவலைப்படப் போகிறேன். எனக்கு வேண்டிய சொத்து அவ்வொரு பொருள். அதை நான் எப்படி அடைவேன்? எனக்கு மார்க்கமே தெரியவில்லையே! நீங்களெல்லோரும் இதற்கு உதவி செய்தால் போதும்'' என்று கண்ணீர் விட்டாள்.

பின்னும் சிறிது நேரம் சென்றது. பங்காளிகளில் ஒருவன் வெகு வேகமாக ரங்கமணியிடம் ஓடி வந்தான். அப்புறம் இப்புறம் திரும்பிப் பார்த்தான். "சின்னம்மா! என்னைக் கண்டவுடனே உன் முகம் வெறுப்படைகின்றது. துர்யோதனுதிகளின் கூட்டத்தில் சேர்ந்த விகர்ணன் போல என் கதியிருக்கிறது. அவர்களுடன் கூட இருப்பதால் என்னை நம்புவது கஷ்டந்தான். எனினும் நான் என்னவோ பரம யோக்யன் என்று கூறவில்லை; இருந்தாலும் மகா பயங்கரமான கொடிய காரியத்தைச் செய்யவும், செய்வதைப் பார்க்கவும் என் மனம் இடங் கொடுக்கவில்லை. ஆதலால் நான் திருட்டுத்தனமாக ஓடி வந்திருக்கிறேன்.

சின்னம்மா! உன்னுடைய நிலைமையைப் பார்த்தால் மனம் உருகுகிறது. நான் இங்கு எதற்கு வந்தேன் என்ருல் நீ என்னை முற்றிலும் நம்பவேண்டும். நம்பினல் நான் ஒரு செய்தியைத் தெரிவிக்கின்றேன்.'' என்ருன்.

இந்த பீடிகை வார்த்தைகளைக் கேட்ட ரங்கமணி சற்று வெறுப்பாயும், அலக்ஷியமாயும் பேசத் தொடங்கி, "அப்பா! நீ யாரோ நான் யாரோ! உன்னை நான் நேரில் பார்த்திருக்கிறேனே அதுவுமில்லையே: என் பதி சேவையும், பகவத் சேவையும் செய்து என் காலத்தை இதுவரையில் கடத்தி வந்தேன். அதற்குத்தான் கொடிய பாவிகள் ஏற்பட்டார்கள். எனக்கு இனி நம்புவதற்கும் நம்பாத

தற்கும் என்ன இருக்கிறது. நீ அந்த கூட்டத்தவன் என்று கூட எனக்குத் தெரியாது. நான் கடவுளை நம்பினேன். அக் கடவுளே என்னைக் கைவிட்டு விட்டார் என்றால் இனி மனிதரை நம்புவதில் என்ன இருக்கிறது?'' என்றாள்.

இதைக் கேட்ட அம் மனிதன் "அம்மா! நீ இப்படிக் கூறுவது சகஜந்தான். ஏனென்றால், தற்போது உன் மனம் இருக்கும் நிலைமையை நானறிவேன். நீ எதைக் கூறினாலும் சரி. என் வார்த்தையில் நம்பிக்கை வைப்பதாயின் நான் ஒரு முக்யமான விஷயத்தைக் கூறுகிறேன். அதற்கு என்னால் கூடியவரையில் சகாயமும் செய்கிறேன். நான் மோசமாகக் கூறுவதாக நீ எண்ணவேண்டாம்.'' என்றான்.

ரங்க:—ஆகா! முக்கிய விஷயமா! அதென்ன? அதைக் கூறு; பார்க்கலாம். 'அம்மா! மணீ! மணீ!' என்றாள்- மணியும் ஓடிவந்தாள். அம்மா! இவர் ஏதோ முக்ய விஷயத்தைக் கூறுகிறாம். நாம் இவரை நம்பவேண்டுமாம். ஏதேதோ கூறுகிறார். அது என்ன விஷயம் அதைக் கேட்டுத்தான் பார்க்கலாமே...

மணி:—அம்மா! இவரை யாரென்று நினைத்தாய்? நமது எதிரிகளின் கூட்டத்தைச் சேர்ந்தவரன்றோ இவர். ஐயையோ! இதிலும் ஏதோ மோசம் இருப்பது நிச்சயம். நீங்கள் நம்பி ஏமாறவேண்டாம்; மோசம் போகவேண்டாம்.

ரங்க:—கண்ணே! தலைக்குமேல் வெள்ளம் முழம் ஏறினால் என்ன கஜம் ஏறினால்தான் என்ன? இனி நமக்கு இதற்கு மேலும் ஆபத்தும் ஏமாற்றமும் இருக்கிறதா! எல்லாம் முடிந்துவிட்டது. இவரும் சொல்வதைச் சொல்லட்டும். ஐயா! என்ன செய்தி? அதைச் சொல்லும்; நேரமாகிறது.

வந்த:—சின்னம்மா! இந்த விஷயம் பரம ரகஸ்யமாக விருக்க வேண்டும். வெளியில் தெரியக்கூடாது. தெரிந்தால் பேராபத்தாக முடியும். அதாவது விவரம் மட்டும் என்னைக் கேட்கக்கூடாது. சித்தப்பா இறந்துபோகவில்லை என்றும் இவ்வூருக்குச் சமீபத்திலிருக்கும் மலையிலுள்ள குகையில் இருப்பதாகவும் நான் கேள்விப்படுகிறேன். ஆனால் அவரைக் கொலை செய்ததாகவே வழக்கு மட்டும்

தயார் செய்யப்படுகிறது. உஷார்: நீங்கள் முதலில் கவனிக்க வேண்டியதைப் பாருங்கள்—என்று கூறிவிட்டு ஓடிவிட்டான்.

திடீரென்று இச் சொல்லைக் கேட்டதும்—அதியாச்சரியமான இவ் விஷயத்தைக் கேட்டதும்—இது உண்மையா யிருக்குமா! இது நம்பத்தக்கதா? என்ன இது? அப்பா! மலைக் குகைக்குள்ளிருப்பதற்குக் காரணம் என்ன? அவர் எதற்காக மலைக் குகைக்குள் இருக்கவேண்டும்!'' என்ற குழப்பமும்,வியப்பும் கட்டு மீறிவிட்டன. நாம் உடனே அங்கு சென்று பார்க்கவேண்டிய பிரயத்தனத்தைச் செய்வோம் என்று தீர்மானித்தார்கள்.

ஒருநாளு மின்றித் திருநாள் போல மணி வீட்டை விட்டு வெளியில் தனிமையில் நடப்பதற்குத் துணிந்தாள். வாஸுவைப் பார்த்து விஷயத்தை உரைக்க ஆசை கொண்டு இதை ரங்கமணியிடம் தெரிவித்தாள். அவளும் இதற்குச் சம்மதித்து விடை கொடுத்தாள். வாஸு எங்கு வசிக்கிறான் என்ற விவரம் தெரியாதெனினும் அவன் வேலை பார்க்கும் தோட்டமிருக்கும் இடம் தெரியுமாதலால் அங்கு செல்லக் கிளம்பினாள்.

வீதியில் தனிமையில் நடந்தறியாத மணி அவளுடைய மனோவேதனையின் வேகத்தால் தடதடவென்று நடந்து தோட்டத்தையடைந்தாள். அப்போதுதான் வாஸு தோட்டக்காரர்களுக்கு ஏதோ வேலை ஏவிக்கொண்டிருக்கிறான். வன தேவதையைப் போன்ற இம் மங்கை தன் தோட்டத்தைத் தேடி வந்து கொண்டிருப்பதைக் கண்டு ஆச்சரியத்தினால் தேகம் மெய்ம் மறந்து சந்தோஷத்துடன் எதிரில் வந்து "ஹா! இதென்ன ஆச்சரியம்! மணீ! தனிமையில் நடந்தா இங்கு வந்தாய்? என்ன விஷயம். ஏதேனும் தகவல் கிடைத்ததா! என்னை வரும்படி சொல்லியனுப்ப லாகாதா?'' என்று கேட்டவாறு தனக்கென்றுள்ள விடுதிக்கு அழைத்துச் சென்றான்.

மணி வெகு வணக்கத்துடன், "அன்பா! நாம் இவ்விடத்தில் பேசுவதை விட எங்கள் வீட்டிற்குச் சென்றுவிடுவது நலமென்று தோன்றுகிறது. இங்கு யாரேனும் கவனித்தால் என்ன செய்வது? விஷயமோ மிகவும் முக்யம்'' என்றாள்.

வாஸு:—மணீ! இங்கு என்னுத்திரவின்றி யாரும் வரமாட்டார்கள். ஆகையால் விஷயத்தை பயமின்றி தாராளமாகச்சொல்லு. என்ன விஷயம்? அதி ஆவலாக விருக்கிறது.

மணி:—அன்பா! (விஷயத்தைக் கூறி) இதில் எது நிஜமோ! எது பொய்யோ! அது கடவுளுக்குத்தான் அர்ப்பணம். அக் கூட்டத்தில் சேர்ந்தவனே ஒருவன் கூறினன். இது வேண்டுமென்று நம்மை ஆசை காட்டி அலையச் செய்வதற்காகக் கூறிய மொழியோ, அன்றி இன்னும் ஏதேனும் சதியாலோசனை செய்து நம்மை அதில் வீழ்த்தும் பொருட்டுக் கூறிய மொழியோ ஒன்றும் விளங்கவில்லை. எதற்கும் நாம் தக்க ஜாக்ரதையுடன் ஒரு முறை பார்த்துவிடலாம் என்று தோன்றுகிறது....துப்பறியும் வீரசிங்கத்தைப் பார்க்கலாமென்று அன்று தெரிவித்தீர்களே! அவரைப் பார்த்தீர்களா; அவர் என்ன சொன்னர்?

வாஸு:—அவர் நேற்றுதான் ஊரிலிருந்து வந்தார். தினம் அவர் வரும் நேரத்தை எதிர்பார்த்துக் கொண்டே காத்திருந்து நேற்று அவரைப் பார்த்தேன். அவர் என்னைக் கண்டவுடன் ஒரு வாறு நகைத்தார். காரணமோ எனக்குத் தெரியவில்லை. நான் முதலில் வெகு பணிவுடன் வணங்கி விட்டு சகல விஷயத்தையும் ஒன்று விடாமல் கூறினேன். அவர் தெரிவித்த ஒரு சங்கதி என்னுடைய வியப்பை அதிகரிக்கச் செய்தது.

அதாவது நமது எதிரிகள்—இப்போது அட்டகாஸம் செய்யும் கூட்டத்தினர்கள்—வெகு சாதுவாயும் நிரபராதிகள் போலும் நடித்து தங்களுக்கு அவரை உதவிக்கு வரவேண்டுமென்று வெகு அக்கரையுள்ள சொந்தக்காரர்கள் போல் அழுது அமர்க்களம் செய்தார்களாம். நாயுடுவுக்கு உத்தமரின் விஷயம் ஒன்றும் தெரியாதென்று மூட நம்பிக்கை கொண்டிருக்கிறர்களோ, அன்றி இந்த வலையில் நாயுடுவை வீழ்த்தி அவரை ஒழித்துவிட்டால் தமக்கு இனி பயமே இல்லை என்று நினைத்துச் செய்திருக்கிறர்களோ! ஈசனுக்கே வெளிச்சம்.

நாயுடு வென்ன லேசுபட்ட ஆசாமியா! அவர் உத்தமருடன்

நன்ருகப் பழகி அவர் குணங்களை நன்ருகத் தெரிந்துகொண்ட மனிதரல்லவா! ஆகையினுல் அவர் வெகு தந்திரமாகப் பேசி அவர் களுக்கே உதவி செய்வதாகக் கூறி ஏதேதோ விஷயங்களைக் கேட்டாராம். யார் மீது சந்தேகம். உத்தமர் எப்படி காணுமல் போயிருக்கலாம். அந்த ஆளை ஏன் சுட்டுக் கொன்றிருக்க வேண்டுமென்று சில விஷயங்களைக் கேட்டாராம்.

அதற்கு அம்மனிதன் உத்தமரைக் காணுமல் இருப்பதாக இருப்பது வெறும் பொய்யென்றும், அவரைப் பணத்திற்கு ஆசைப் பட்டு நீயும் நானும் கொன்றிருப்போம் என்று சந்தேகம் தட்டுவதாயும் உடனே கைது செய்யச் சரியான ஆதாரம் கிடைக்கவில்லை என்றும், அனுமானத்தைக் கொண்டு கைது செய்யவேண்டும்; அதற்கும் அவர்களை அறியாது காவல் வைத்து இருக்கிறதென்றும், உண்மையைத் தாங்கள் கண்டுபிடிக்க வேண்டுமென்றும் கூறினுர்களாம்.

மணி! பழி ஓரிடம்; பண்டம் ஓரிடம். என்பது சரியாகிவிட்டது பார்த்தாயா? என்ன அக்ரமம்! எந்த சமயம் எத்தகைய ஆபத்து நேருமோ தெரியவில்லை. நானும் வெகுவாய் நாயுடுவிடம் சொன்னேன். அவர் தனக்குச் சகலமும் தெரியும் என்றும் நீங்கள் கவலைப்பட வேண்டாம் என்றும் தைரியங் கூறி இருக்கிருர். இப் போது நாம் நேராக அவரிடம் சென்று இச் செய்தியைக் கூறி யோசனை கேட்கலாமா என்று தோன்றுகிறது. வா; அங்கு செல்லலாம்.'' என்ருன்

தாமதமின்றி இருவரும் நாயுடுவின் வீட்டை யடைந்தார்கள். அங்கு இவர்களுக்கு முன்பே இவர்களின் எதிரிகள் 5—6 பேர்கள் கூட்டமாக உட்கார்ந்திருப்பதைப் பார்த்ததும் இவர் களுக்கு மிகவும் திடுக்கிட்டுவிட்டது. இவர்களைப் பார்த்த உடனே எல்லோரும் ஒருவிதமாக நகைத்துக்கொண்டே "ஓஹோ!ஹோ! தம்பதி சகிதம் எங்கே இப்படி வந்தது? வாருங்கள். வாருங்கள். நாயுடு காருவைப் பார்ப்பதற்காகவா! சரிதான். உட்காருங்கள்.'' என்று பரிகாஸமாகச் சொன்னுர்கள்.

இதைக் கேட்டு மிக்க விசனத்தை யடைந்து அவர்களுக்கு ஏதுவுமே பதில் கூருது அங்கு நிற்காமல் திரும்பிவிட்டார்கள்,

"ஐயோ! என்ன செய்வது? நாயுடுகாரு வந்தவுடனே இத் துஷ்டர்கள் என்றோ பார்த்துப் பேசி நேரத்தைப் போக்கிவிடப் போகிறார்கள். நாம் அவரை எவ்விதம் பார்ப்பது?'' என்று கலங்கியவாறு வந்து கொண்டே இருக்கையில் நாயுடு ஓர் மோட்டார்காரில் எதிரில் வந்தார்.

அதைக் கூர்ந்து கவனித்த வாஸு "ஆ! அதோ! நாயுடுகாரு. அதோ! நாயுடுகாரு!'' என்று கூறியவாறு கையை ஆட்டி வண்டியை நிறுத்தச் செய்தான். நாயுடு வண்டியை நிறுத்தி இவர்களையும் அதில் ஏற்றிக்கொண்டு வண்டியை மீண்டும் விட்டார். "அப்பா வாஸு! இந்த அம்மாள் தான் நீ தெரிவித்தவர்களா?'' என்றார் நாயுடு.

அதற்குள் வண்டியிலேயே மணி நாயுடுவின் காலில் விழுந்து காலைப் பிடித்துக்கொண்டு "துப்பறியும் சிங்கமே! தம்மைப் பற்றி நான் கேள்விப் பட்டதுண்டு. பத்திரிகைகளில் படித்திருக்கிறேன். சுசீலாவுக்காக நீங்கள் எடுத்துக்கொண்ட பிரயாசையும் ஜெயம் உண்டாக்கியதையும் அப்பா அடிக்கடி கூறுவார்கள். ஸ்ரீதரனையே ஓர் நாடகம் நடிக்கச் செய்து அந்த வழக்கில் முக்ய காரியத்தை ஜெயித்த அதிசயத்தை அப்பா பிரதி வேளையும் கூறுவார்.

(குறிப்பு—ஸ்ரீமதி வை.மு.கோதை நாயகி அம்மாள் எழுதிய 'சோதனையின் கொடுமை—அல்லது—செல்வமே சொர்க்கம்'—என்கிற அதி ஆச்சரியகரமான துப்பறியும் நாவலை வாங்கிப் படித்ீர்களானால் சுசீலா, ஸ்ரீதரன், சாந்தா, செல்வமணி முதலியோருடைய விஷயங்களை அறிந்து இன்புறலாம். விலை ரூபாய் 1—8 தான். உடனே ஆர்டர் செய்யுங்கள்)

அப்போதெல்லாம் அத்தகைய வீராதி வீரனைக் காணும் பாக்யம் என்றாவது கிடைக்குமா! என்று ஏங்கினேன். கடவுளருளால் எங்கள் விஷயத்திலேயே உங்களைக்காணவும், உங்களால் எங்கள் குடும்பத்து ஆபத்து நீங்கவும் சமயம் உண்டாகியது. தாங்கள் இது வரையில் எத்தனையோ உயிர்களைக் காத்து ரக்ஷித்திருப்பீர்கள். இச்சமயம் என் தந்தையின் விஷயத்தைக் கண்டுபிடித்து என் தாயின் கவலையை நீக்கினால் போதும். எங்களுக்குத் தற்போது பேசுந் தெய்வம் தாங்கள்தான்.'' என்று கதறி முறையிட்டாள்.

வாஸ:—அன்புடையீர்! தங்கள் வீட்டிற்குச் சென்றேன். அங்கு எங்கள் எதிரிகள் காத்துக் கொண்டிருப்பதைக் கண்டு உடனே திரும்பி வந்துவிட்டேன். இன்று ஓர் புதிய விஷயம் கிடைத்திருக்கிறது. (ரங்கமணியிடம் ஒருவன் கூறிய சகல விஷயத்தையுங் கூறி) இப்படி ஒருவர் சொல்லிச் சென்றார். பெரியீர்! இதை எவ்விதம் நம்புவது, என்ன செய்வது ஒன்றும் தெரியவில்லையே? இதைப் பற்றிக் கேட்பதற்கே இங்கு வந்தோம்.

நாயுடு:—ஹா! அப்படிக் கூறிய மனிதன் யார்? எங்கிருக்கிறான். உங்களுக்குத் தெரியுமா!

மணி:—பெரியீர்! அவன் அந்தக் கூட்டத்தில் இருப்பவன் தான். அக் கூட்டத்துடன் அவனைப் பார்த்த ஞாபகமிருக்கிறது. அவனும் அப்படியேதான் கூறினான். அவன் அந்த வார்த்தைகளைக் கூறியவுடனே அவ்விடத்திலேயே நிற்காமல் ஓடிவிட்டான். அதைப் பார்த்தால் தான் சந்தேகமாக விருக்கிறது.

நாயுடு:—அம்மா! நீ மகா புத்திசாலி: நான் இச்சமயம் நடந்து கொள்ளவேண்டி இருக்கிற நிலைமை மிகவும் கஷ்டமானது. எத்தனையோ விதமான தந்திர உபாயங்களையும் இப்போது நடித்துத் தீர வேண்டும். இவைகளுக்கு உன்னையும் ஓர் கருவியாகக் கைக்கொள்ள நினைக்கிறேன். இப்போது முதலில் நான் என்ன செய்ய வேண்டுமென்றால் உங்களைப் பார்த்ததாகவே...உங்களுக்கு உதவி செய்வதாகவே தெரியக்கூடாது நான் உங்களை எதிரிகளாக நினைத்து அதன்படி நடக்க வேண்டும். அவ்வாறு நடந்தால்தான் நன்மையுண்டாகும். அந்த குகைக்கு நானே தக்க ஜாக்ரதையுடன் சென்று பார்த்து வருகிறேன். நீங்கள் என்னைச் சந்திக்க வேண்டுமானால் நாம் ஒரு இடம் நிச்சயம் செய்துகொள்ளவேண்டும். அதாவது என் வீட்டுத் தோட்டத்தில் உள்ள ஓர் ஆலமரத்தடியில் வந்து தோட்டக்காரனுடன் பேசுகிறவர்கள் போல நின்று கொண்டிருந்தால் நான் வந்து பார்த்துக்கொள்கிறேன்.

நான் இப்பொழுது நேரே என் வீட்டிற்குச் செல்கிறேன். நீங்கள் அங்கே இன்னும் அரைமணி நேரம் சென்று வாருங்கள்.

அவர்கள் எதிரில் உங்களை நான் உதாசீனமாகப் பேசி உங்களுக்கு உதவி புரிய முடியாதென்று திரஸ்கரித்து விடுகிறேன். அப்போது நீங்கள் "ஐயா! நீங்கள் தர்மவான் என்றும், நியாயப்படிக்கு நடப்பவர்கள் என்றும் உலகம் முற்றும் கூறுகின்றதே! எங்கள் விஷயத்தில் அனியாயத்தை ஆதரிப்பது அழகா! ஐயோ! இவர்களெல்லாம் எங்கள் எதிரியாயிற்றே: இவர்கள்தான் குற்றத்திற்கு முதலாளிகள் என்பதை நிரூபிக்கமாட்டீர்களா?'' என்று இருவரும் கூச்சலிடுங்கள். அதற்குமேல் என்ன நடக்கிறது பாருங்கள். என்று இன்னும் சில விஷயங்களைக் கூறிப் பின்னர் அவர்களை ஓர் இடத்தில் நிறுத்தி விட்டுத் தன் வீடு போய்ச் சேர்ந்தார்.

ஒன்றுமே அறியாதது போல பாவனை காட்டி "ஓகோ! நீங்கள் இங்கு காத்திருக்கிறீர்களா! நீங்கள் இங்கு இருப்பது தெரியாமல் நான் உங்களைத் தேடிக்கொண்டு உத்தமர் வீட்டிற்குச் சென்றேன். அங்கு நமோதே காணவில்லை. உள்ளே ஏதோ பெரிய அழுகைக் குரல் கேட்டது. என்னவென்று கவனித்தேன். "பாவிகள், படுபாவிகள் இவர்களை அதம் செய்வாயா? சூனியம் வைத்துக் கொல்வாயா?'' என்ற குரல் கேட்டது. உங்களையும் காணுமையினால் நான் வந்துவிட்டேன். ஊம்...என்ன சமாச்சாரம்'' என்று ஒரு போடு போட்டார்.

இதைக் கேட்ட அவர்களுக்கு உண்மையிலேயே தூக்கி வாரிப் போட்டது. "என்ன! மந்திரமா! சூனியமா! என்ன அக்ரமம்? ஒரு வீட்டுப் பிரபுவைக் கொலை செய்து மறைத்துவிட்ட பாவத்துடன் நிரபராதியான எங்களைச் சூனியம் செய்யவா பார்க்கிறார்கள். ஆகட்டும். நாயுடுகாரு! இதற்கெல்லாம் நாங்கள் கவலைப்படவே மாட்டோம்......

நாயுடு:—(இடைமறுத்து)ஐயையோ! மந்திரம் என்றால் மலையே நடுங்குமே: நீங்கள் ஏன் அப்படி அலக்ஷியமாகச் சொல்கிறீர்கள். அவர்கள் ஒருகால் ஏதேனும் செய்திருந்தால் என்ன செய்வது?

அவர்:—ஆமாம்: அந்த அல்பப் பூச்சிகளுக்கு என்ன செய்ய முடியும். இதற்கு நம்ம ஆசாமி ஒருவன் இருக்கிறான். அவனை

விட்டு நான் பிரதி வேலையைச் செய்துவிடுகிறேன். அதைப் பற்றித் தாங்கள் பயப்படவேண்டாம்.

நாயுடு:—அப்பா! நீங்கள் ஏதோ தைரியமாகக் கூறுகிறீர்கள். நான் எத்தனை வருடமாக அனுபவப்பட்டுக் குட்டுபட் டிருப்பதால் எந்த சமயம் என்ன ஆபத்து நேருமோ என்று பயமா யிருக்கிறது. நீங்கள் பயமின்றி இருக்கலாம். நான்தானே குற்றவாளிகளுக்கு எதிரியாக விருக்கிறேன். ஆகையினால் எனக்கு சூனியம் வைத்து விட்டால் என்ன செய்வது......மற்ற எதுவாயினும் பரவாயில்லை. இவ் விஷயத்தில் எனக்கு மிகவும் கவலையாக விருக்கிறதே! இத்தனை காலம் நல்ல பெயர் வாங்கிவிட்டு இப்போது கேவலமான சூனியத்தால் நான் நாசமடைவ தென்றால்......

அவர்:—அடாடா! நீங்கள் அப்படி சற்றும் நினைக்க வேண்டாம். உங்களுக்குச் சற்றும் பயமில்லாதிருக்க ஒரு வழி செய்யலாமே. அதாவது எங்களுக்கு மிகவும் வேண்டிய சாமியார் ஒருவர் மூடம்பாக்கத்து மலையில் ஒரு குகையில் சதா நிஷ்டையிலேயே இருக்கிறார். அவரிடம் அழைத்துச் செல்கிறோம். அவர் ஒரு விபூதி கொடுப்பார். அதை சதா நீங்கள் மடியில் வைத்திருந்தால் பயமென்பதே இருக்காது. எதிரிகள் பயமோ, சூனியம், மந்திரம் முதலியவற்றின் பயமோ அடியோடு தொலையும்; எதுவும் ஒன்றும் செய்ய முடியாது.

நாயுடு:—ஆ! அப்படியா! மிக்க சந்தோஷம். அதை முதலில் செய்வோம். என்னிடம் விபூதி இருந்தால் நான் எதற்கும் அஞ்சமாட்டேன். என் வேலையை ஜரூராகச் செய்வேன்......யாரது...வருவது......

அவர்:—நாயுடுகாரு! இவர்கள்தான் எங்கள் எதிரி. இந்த பெண்தான் எங்க குடும்பத்துப் பெரிய மனிதனைக் கொன்றிருக்கிறாள். இந்த படு நீலி முன்பே ஒரு தரம் வந்தாள். இவன் ஒரு பிச்சைக்காரப் பயல். இவனைக் கைவசம் செய்துகொண்டுதான் இக்காரியத்தை முடித்திருக்கிறாள். நாங்கள் அன்றே கைது செய்திருப்போம். தாங்கள் சற்று பொறு பொறு என்றதால் அவர்கள் அறியா

மல் காவல் வைத்திருக்கிறோம். எங்கும் தப்பித்துப் போக முடியாத படி செய்திருக்கிறோம்.

நாயுடு:—அப்படியா! மெத்த சந்தோஷம். நான் ஏன் இப்போதே கைது செய்யவேண்டாமென்றேன் என்றால் அனுமானத்தில் செய்துவிட்டுப் பிறகு சரியான சாக்ஷிகள் ஒன்றும் கிடைக்காது போய்விட்டால் முற்றும் வியர்த்தமாகிவிடும். உங்கள்மீதே சந்தேகம் உண்டாகும். இருங்கள் பிறகு பேசலாம். யார் நீங்கள்? எங்கே வந்தீர்கள்?—என்றார்.

மணி:—பெரியீர்! உத்தமரின் வளர்ப்புப் புதல்வி நான். உலகம் போற்றும் தப்பறியும் வீர சிங்கமாகிய தங்களுக்குச் சகல விஷயமும் தெரிந்திருக்கும். உத்தமரைத் தெரியாத மனிதர் உலகத்திலேயே இல்லை. ஆகையால் அவர் விஷயமாக நடந்துள்ள சதியாலோசனைக் கூட்டத்தினரை வேரறுக்கத் தங்களின் உதவியை நாடி வந்திருக்கிறேன். இதோ! இதோ! இப் பாதகர்கள்தான் எங்கள் எதிரிகள். இவர்களே சகலத்திற்கும் காரண கர்த்தராகி வேலையைச் செய்துவிட்டு இப்போது உங்கள் உதவிக்கு வெட்கமின்றி—பயமின்றி—வந்திருக்கிறார்கள்—என்று கூறி முடிக்கு முன் நாயுடு,

"ஓகோ! இந்த வேதாந்தம் பேசிக்கொண்டு பொழுதைக் கழிக்கவேண்டாம். யார் குற்றவாளி, யார் நிரபராதி என்பது எனக்குத் தெரியும். நீ எடுத்துக் கூறவேண்டாம். நீங்கள் கூறுகிறபடி உங்களுக்கு உதவி செய்ய முடியாது. உம். போகலாம்." என்று அலக்ஷியமாகக் கூறினார்.

வாஸு:—ஐயா! உலகம் போற்றும் உத்தமரின் பெயருக்கு ஒத்திருக்கும் பரோபகார புண்ணிய மூர்த்தியாகிய தாங்களா இவ்விதம் உரைப்பது? நியாயத்திற்குத் துணை புரியும் நீங்களா அனியாயத்திற்குக் கை கொடுக்கப் போகின்றீர்கள். நாயுடுகாரு! தாங்கள் அவசரப்பட்டுப் பேசவேண்டாம். சற்று யோசித்துப் பாருங்கள். நியாயத்திற்கு ஜெய முடி சூட்டுங்கள். இப்பாவிகள் எல்லாம் உத்தமரை அடியோடு ஒழிப்பதிலேயே நோக்கமாக இருந்தவர்கள். எண்ணிய படி செய்து முடித்துவிட்டும், இப்போது ஏதோ வீம்பு பேசுகிறார்கள்.

எதிரிகள்:—சீச்சீ! பொறுக்கிப் பயலே! உன் பவிஷு எங்கே வெளியாகிவிடப் போகிறதோ என்று இந்த சப்பைக் கட்டு கட்டிப் பேசுகிருயா! இரு; இரு. உன் கதி எப்படி என்று சீக்கிரமே அறிவாய். நாயுடுகாரு! இவர்களை முதலில் வெளியில் துரத்துங்கள்.

நாயுடு:—பேஷ்! பேஷ்! உங்கள் பிரசங்கங்கள் போதும். வெளியே போகலாம். அதிகமாகப் பேசினல் உடனே கைது செய்து விடுவேன் உம்....அடேய்: ஜவான்! இவர்களைக் கழுத்தைப் பிடித்து வெளியில் தள்ளு. என்று கூறியதும் அங்கு உட்கார்ந்திருந்த எதிரிகள் கலகலவென்று நகைத்து "ஹஹ்ஹஹ்ஹஹா! பேஷ்: சரியான பனிஷ்மெண்டு. நாயுடுகாரு! இப்படித்தான் செய்யவேண்டும்." என்று ஆரவாரித்தார்கள்.

வாஸுவும் மணியும் மிகவும் விசனப்பட்டவர்களைப் போல நடித்துப் போய் விட்டார்கள். மணி வீட்டிற்கு வந்ததும் தன் தாயாரிடம் நடந்த சகல விஷயங்களையுங் கூறி "அம்மா! அந்த பேசுந் தெய்வம் நமக்கு உபகாரம் செய்வதாக வாக்குக் கொடுத்திருக்கிருர். இனி பயமில்லை என்று நினைக்கிறேன். கவலைப் படாதீர்கள்" என்று தேற்றினுள்.

மணி தன்னுடைய வீணை, பிடில் முதலிய வாத்யங்கள் துருப் பிடித்துக்கொண்டு வருவதைக் கண்டு மனங் கலங்கியவாறு தன் தந்தையை எண்ணிப் புலம்பியபடியே அவைகளைத் துடைத்துக் கொண்டிருந்தாள். அச்சமயம், "ஹ்ஹஹ்ஹஹ்ஹஹா. ...பலே பேஷ்! அச்சா! இப்போதாவது தெரிந்ததா?" இன்னும் தெரியவில்லையா? இனிமேல் என்ன செய்வதாக உத்தேசம்? என்று கூறிக்கொண்டே இவர்களின் எதிரியாகிய சுப்பண்ணன் மீசையை முறுக்கிக்கொண்டு எதிரில் சென்ருன்.

அவனையும் அவன் கூறிய மொழிகளையுங் கண்டு தேகம் நடுக்கலுற்ற மணி சடக்கென்று அலக்ஷியமாக எழுந்து அப்புறம் திரும்பி நின்று "சீச்சீ! குலத்ரோகியே! வெட்கமின்றி ஒரு பெண்பிள்ளை இருக்குமிடம் வருவதற்கு உன் மானம் எங்கே போயிற்றடா! எனக்கு புத்தி வருவதைப் பற்றி நீ கூறவேண்டாம். போ வெளியில்" என்று முடுக்காயும் அழுத்தமாயுங் கூறினுள்.

182967

சுப்ப:—ஓகோ! மானமா! ஆகாசமா! ஹீ ஹீ ஹீ ஹீ. நாயுடுவின் உதவிக்காக உன் வைப்புக்காரனையும் இழுத்துக்கொண்டு ஓடி வந்தாயே! நாயுடுவென்ன மகா மேதாவியோ! பிரம்மதேவனே! ஹூம்...இந்த சுப்பண்ணு வெறும் குப்பை என்று நினைத்தாய் போலும். அந்த நாயுடு மனம் வைத்தால் எங்கே காரியம் முடிந்து விடுமோ! என்ற முன்னெச்சரிக்கையாலன்றோ அவனை நாங்களே உதவி கேட்டதாக நடித்துச் சமயம் பார்த்து ஒழித்துவிட இந்த சூழ்ச்சி செய்து விட்டோம். அதை யறியாது வெகு ஜம்பமாக வந்தாயே! நாயுடுவின் கதி இன்றோடு முடிந்துவிடும் தெரியுமா!

ஏ பேதையே! இனி உன் வாலாட்டல் ஒன்றும் செய்ய முடியாது. உன்னை எதற்கு நாங்கள் கைது செய்யவில்லை தெரியுமா!... ஊம். யோசித்துப் பாரு. இந்த நிமிடம் முதல் நீ என்னுடைய கைதி தெரியுமா! நாயுடு தொலைந்திருப்பான்; வாஸுவும் இந்நேரம்... என்...கட்டாயம் குகையி லடைபட்டிருப்பான். குகையில் உத்தம ரிருப்பதாகச் சொல்லியது யார் என்றும், எதற்கென்றும் தெரியுமா! வாஸுவையுவும், ரங்கமணியம்மாளையும் குகையில் அடைப்பதற்குத்தான் இந்த சூழ்ச்சி. என் தம்பி அப்பண்ணுவே செய்தான். அதோ! அதோ! ஜன்னலால் பாரு...வண்டியில் யார் செல்கிறார்கள் ...வாஸுவும்...ரங்கமணியும் தெரிகிறதா!...ஊம். இனிமேல் ஜாக்ரதை''...என்றான்.

ஈயத்தைக் காய்ச்சி தன்மீது ஊற்றியதுபோலான தவிப்படைந்த மணி ஜன்னல் வழியாகப் பார்க்கையில் வாஸுவும், தன் தாயாரும் செல்வதைக் கண்டதுதான் தாமதம் பின்னும் பேரிடி விழப்பெற்றவள்போல துடி துடித்து, "அம்மா!...வாஸு! வாஸு! அம்மா!...மோசம் போகாதீர்கள்! மோசம் போகாதீர்கள்'' என்று பெரிய சத்தமிட்டுக் கத்துகிறாள். புள்ளிமான்போலத் துள்ளியோடி வெளியேறப் பார்த்தாள். கதவு பக்கம் நின்றுகொண்டிருந்த சுப்பண்ணு, ஹா...என்று பெரியதாக நகைத்து "சினிமா எடுக்கலாம்போல அத்தனை அழகாக நடிக்கிறாயே! பேஷ்! பேஷ்! ....வாஸு! வாஸு...என்ன அருமையாக அழைக்கிறாய் பாவம்......இனி இப்படி அழைக்க முடியாதல்லவா! உம்.'' என்று பரிகவித்தான். அடுத்த நிமிடம் மணி இன்னும் பலமான குரலில் கத்தியதோடு, ஆவேசத்துடன் கண்ணாடி ஜன்னல் கதவு சாத்தப்பட்டிருந்ததைக் குத்தி யுடைத்தாள். அதே நிமிடம் மணியின் வாயில் துணிப் பந்து ஒன்று திணிக்கப்பட்டது. உடனே "வாஸு! வாஸு! அம்மா! அம்மா!'' என்று கத்திக்கொண்டே ஸ்மரணை யற்று விழுந்தாள். அகதிக்குத் துணை யார்! அந்த ஆதி மூர்த்தி யன்றோ! எப்படி துணை புரியப் போகிறாரோ தெரியவில்லை!

# பக்ஷ மாலிகா

ஸ்ரீமதி வை. மு. கோதைநாயகி அம்மாள் எழுதிய, அடங்கா நகைப்பைத் தரும் அனேக ஹாஸ்யக் கதைகள் நிறைந்த பக்ஷ மாலிகா உங்களைப் பக்ஷத்துடன் தேடிக்கொண்டு வந்துவிட்டது.

கண்ணைக் கவரும் சுமார் 15 சித்திரப் படங்களுடன் கூடியது.

## விலை அணா ஆறேதான்

# ஜெயஸஞ்ஜீவியை

நீங்கள் படித்தீர்களா? இல்லையாயின் உடனே நாலணா ஸ்டாம்பு அனுப்புங்கள்.

## உங்களுக்கு எந்த நாவல் இனாமாக வேண்டும்?

கீழ்க்கண்ட விவரத்தைப் படித்து, உங்களது நேயர்களின் சந்தாவை அனுப்பும்போது, வேண்டிய புத்தகங்களின் பெயரைத் தெரிவியுங்கள். மறு தபாலில் தபாற்செலவின்றி அனுப்புகிறோம்.

| | | பரிசு புத்தகங்கள் |
|---|---|---|
| (1) | ஒரு புதிய சந்தாதாரரைச் சேர்த்து முன்பண மனுப்புகிறவர்களுக்கு | இன்ப மனோகரி |
| (2) | 2 புதிய சந்தாதாரர்களை ,, | நளினசேகரன் அல்லது மூன்று வைரங்கள் அல்லது வீரவஸந்தா |
| (3) | 3 ,, | கோபாலரத்னம் |
| (4) | 4 ,, ,, | கதம்பமாலை அல்லது சுகந்தபுஷ்பம் |
| (5) | 5 ,, ,, | கௌரீமுகுந்தன் அல்லது ஸாரமதி |
| (6) | 6 ,, ,, | சண்பகவிஜயம் |
| (7) | 7 ,, | சாமளநாதன் அல்லது ருக்மிணிகாந்தன் அல்லது நவநீதகிருஷ்ணன் |
| (8) | 8 ,, ,, | வைதேகி அல்லது பத்மசுந்தரன் அல்லது ராதாமணி அல்லது சாருலோசன அல்லது பரிமளகேசவன் & உத்தமசீலன் |

போலி மருந்துகளைப் பற்றி எச்சரிக்கையாக இருங்கள் !!!

# அமிர்தாஞ்சனம்

நாற்பது வருஷங்களுக்கு மேலாக முன்னணியில் நிற்கின்றது.




மற்றவைகள் இதைப் பின்பற்றித்தான் வருகின்றன.

லக்ஷக் கணக்கில் செலவாகின்றது

எல்லா இடங்களிலும் விற்கப்படும்.

ஏஜண்டு:
ஏ. பி. பாபெக்கு,
சைனா பஜார் ரோட்,
சென்னை.

அமிர்தாஞ்சன் டிபோ.,
சென்னை கல்கத்தா
பம்பாய்.

PRINTED AT TATA PRESS, & PUBLISHED BY V. M. PARTHASARATHY, MADRAS.